இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 144 | இதழ் : 09 | திகதி : 28.06.2020 | விலை : 30.00

## யாழ் மறைமாவட்டத்தின் முதலாவது ஆயர் அதி.வண.பெற்றக்கினி ஆண்டகையின் உருவச்சிலை திறந்து வைப்பு



1849ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் முதலாவது அப்போஸ்தலிக்க விக்காராகவும், முதல் ஆயராகவும், நியமனம் பெற்று எமது மறைமாவட்டத்தின் உருவாக்கத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும் அரும் பணியாற்றி 1857ல் இறைபதம் அடைந்த அதி வணக்கத்துக்குரிய ஆயர் ஒராட்சியோ பெற்றக்கினி ஆண்டகை அவர்களின் உருவச்சிலை கடந்த 27.06.2020 அன்று யாழ்.ஆயர் இல்ல வளாகத்தில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் விமரிசையாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்.மறைமாவட்டக் குருக்கள் அனைவரும் கலந்து சிறப்பித்தார்கள். அருட்கலாநிதி.ஞா. பிலேந்திரன் அடிகளார் ஆயர் பெற்றக்கினி ஆண்டகை எமது யாழ் மறைமாவட்டத்தின் உருவாக்கத்திற்கு அளித்த பங்களிப்புப் பற்றியும் அவருடைய உருவச்சிலை நிறுவுவதின் அவசியம் பற்றியும் சிறப்புரை ஆற்றினார்.

ஆயர் பெற்றக்கினி ஆண்டகையின் உருவச்சிலை திருமறைக்கலாமன்ற இயக்குனர் அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகளாரின் வழிநடத்தலில் சிற்பக் கலைஞர்கள் ரி. சபேசன், ஆர். கிருபா ஆகியோரால் பேராசிரியர் சரத் சந்திரஜீவா அவர்களின் மேற்பார்வையில் செதுக்கப்பட்டு நிறுவப்பட்டது. இவ் உருவச்சிலை யாழ் மறைமாவட்டத்தின் வரலாற்றுச் சின்னமாகக் கருதப்படுகிறது.

## 90 ஆவது அகவையில் J.B. தேவராஜா அடிகளார்



90வது அகவையில் அருட்பணி. J.B. தேவராஜா அடிகளார் இறைவனுக்கு நன்றி கூறித் தனது நன்றித் திருப்பலியை யாழ். மன்னார் மறைமாவட்டக் குருக்களோடு இணைந்து 16.06.2020 அன்று காலை 11 மணிக்கு யாழ். ஆயர் இல்ல சிற்றாலயத்தில் ஒப்புக்கொடுத்தார். இந் நன்றித் திருப்பலியில் யாழ்.. மன்னார் ஆயர்களோடு மட்டுநகர் ஓய்வு நிலை ஆயரும் இணைந்து சிறப்பித்தனர். திருப்பலியைத் தொடர்ந்து அடிகளாரை வாழ்த்தி சிறப்புரைகளும் இடம்பெற்றன.

## கூழாமுறிப்புப் பங்கில் புதிய குருமனை





முல்லைத்தீவு மறைக்கோட்டத்தில் அமைந்துள்ள கூழாமுறிப்புப் பங்கில் புதிதாக அமைக்கப்பட்ட பங்குப் பணிமனையை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை 19. 06. 2020 அன்று ஆசீர்வதித்துத் திறந்து வைத்தார். இப் பங்குப்பணிமனையின் கட்டிடப்பணிகளையும் திறப்புவிழா ஒழுங்குகளையும் பங்குத்தந்தை அருட்திரு. நிக்சன் கொலின்ஸ் அடிகளார் மிகச் சிறப்பாக செய்து முடித்திருந்தார் .

## யாழ். மறைமாவட்டத்திற்குப் புதிய குருக்கள் நால்வர்



யாழ். மறைமாவட்டத்திற்குப் புதிய பணிக்குருக்களாக அருட்பணியாளர்கள் **ஜே. அலிஸ்ரன் நீயூமன், ஜோ.ஜோண் குருஸ், பிரான்சிஸ் றீசன் நிதர்சன், சூ.எட்வின் நரேஷ்** ஆகியோர் கடந்த 27.06.2020 சனிக்கிழமை அன்று யாழ். ஆயர் அவர்களால் திருநிலைப்படுத்தப்பட்டனர்.

புதிய குருக்களை யாழ். ஆயருடனும், குருமுதல்வருடனும், பெரிய குருமட அதிபருடனும் படத்தில் காணலாம்.

## 90 ஆவது அகவையில் மூத்த ஆசிரியை



திருக்குடும்பக் கன்னியர் தேசிய பாடசாலையின் ஓய்வுநிலை ஆசிரியை செல்வி. வயலற் இம்மானுவேல் அவர்கள் கடந்த வாரம் தமது 90ஆவது அகவையை நினைவுகூர்ந்து இறைவனுக்கு நன்றித் திருப்பலியை ஒப்புக் கொடுத்தார். ஆசிரியை அவர்கள் யாழ். மறைமாவட்ட பொது நிலையினர் ஆணைக்குழுவில் பலகாலம் தம் பணியை மேற்கொண்டவர். சிறிய, பெரிய குருமடங்களில் குரு மாணவர்களுக்குக் கல்வியூட்டியதுடன், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் ஒப்புநோக்குனராகவும் யாழ். கத்தோலிக்கத் திருச்சபைக்கு பல சேவைகளை புரிந்துள்ளார். ஆசிரியையை பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்தி மகிழ்கின்றோம்.

## மறைப்போதனை பற்றிய புதிய வழிகாட்டி வத்திக்கான் வெளியிட்டது

மறைக்கல்விப் போதனை பற்றிய புதிய வழிகாட்டி ஒன்று வத்திக்கான் பேராலயத்தின் நற்செய்தி அறிவிப்பு ஆணையத்தினால் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. மறைக்கல்வி உருவாக்கம், ஏழைகளுக்கு மறைக் கல்வி, சிறைப்பட்டோருக்கு மறைக் கல்வி, பங்குகளில் - பாடசாலைகளில் மறைக்கல்வி, கலாசார சமய பன்முகத் தன்மை, தொழில்நுட்ப, நுண்ணியல் உலகில் மறைக்கல்வி போன்ற விடயங்கள் பற்றி இப்புதிய வழிகாட்டியில் விளக்கப்பட்டுள்ளது.

# எமது எண்ணம்

## பாடத் திட்டங்களிலும் இனவாதம் எதற்கு?

இலங்கை ஒற்றையாட்சி அரசின் கீழான இலங்கைத் தேசியம் என்பதற்குள், ஈழத் தமிழர்களையும் இணைத்துவிட வேண்டுமென்ற நோக்கம் 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான சூழலில் சிங்கள அரசியல் கட்சிகளிடையே மேலோங்கி வருகிறது. இதன் உச்சத்தை 2015 ஆம் ஆண்டு மைத்திரி- ரணில் அரசாங்கத்தில் காணமுடிந்தது. இலங்கைத் தேசியத்தை மையப் பொருளாகக் கொண்டு தமிழ்த்தேசிய அரசியல் நீக்கத்துக்கான முதற்கட்ட ஏற்பாடாகவே ஜெனீவா மனித உரிமைச் சபையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான பிரேரணைக்கு இலங்கை அரசாங்கம் இணை அனுசரனை வழங்கியிருந்தது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அதற்கு ஒத்துழைப்பும் கொடுத்திருந்தது.

2015 ஆம் ஆண்டுக்கு முன்னரான மகிந்த ராஜபக்சவின் ஆட்சியிலும் அதற்கு முந்திய சந்திரிகா மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலும் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் காணி அபகரிப்புகள், சிங்களக் குடியேற்றங்கள் போன்றவற்றுக்கு இலங்கை இராணுவமே காரணமாக இருந்தது. கொழும்பின் ஆலோசனையோடு இலங்கை இராணுவமே இவற்றைச் செய்திருந்தது. ஆனால் மைத்திரி- ரணில் அரசாங்கமே இந்த விவகாரங்களை கொழும்பை மையப்படுத்திய இலங்கை அரச திணைக்களங்கள் மூலமாக செய்விக்கும் முறைமையை அறிமுகப்படுத்தியது.

குறிப்பாகக் காணி அபகரிப்பு என்றால். கொழும்பை மையமாகக் கொண்ட காணிப் பதிவு ஆணையாளர் அலுவலகம், சிங்களக் குடியேற்றம் மற்றும் மண் அகழ்வென்றால் வீடமைப்பு அதிகார சபை, அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபை, புத்தர் சிலை வைத்தல், தாதுகோபுரம் கட்டுதல் என்றால் தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களம் ஆகிய அரச திணைக்களங்கள் மூலம் பொலிஸாரின் உதவிகளைப் பெற்று தாயகப் பிரதேசங்கள் அபகரிக்கப்பட்டு வருகின்றன.

2019 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னரான நிலையிலும்கூட இவ்வாறான அரச திணைக்களங்களைப் பயன்படுத்தியே வடக்குக் கிழக்கில் தமிழ் அடையாளங்கள் அழிக்கப்பட்டு சிங்கள மரபுரிமைகள் செயற்கையான முறையில் சேர்க்கப்படுகின்றன. சிங்கள அரசியல் தலைவர்கள் வெவ்வேறுபட்ட கட்சிகளாக இருந்தாலும் ஈழத்தமிழர் விவகாரங்களில் அவர்களுடைய செயற்பாடுகள் நன்கு திட்டமிடப்பட்ட பொறிமுறை ஒன்றின் ஊடாகவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை வரலாறு. ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆட்சியில் 1983 ஆம் ஆண்டு திருகோணமலை அரச அதிபராகச் சிங்களவர் ஒருவர் நியமிக்கப்பட்டது முதல் மகிந்த ராஜபக்சவின் ஆட்சியில் வவுனியா, மன்னர் மாவட்டங்களில் சிங்களவர்கள் அரச அதிபராக நியமிக்கப்பட்டமை உள்ளிட்ட பல உதாரணங்கள் உண்டு.

அதேவேளை, கல்விச் செயற்பாடுகள் மூலமாகவும் இனவாதக் கருத்துகள், சிங்கள வரலாறுகள் தமிழ் மாணவர்கள் மத்தியில் புகுத்தப்படுகின்றன. ஆண்டு ஆறில் இருந்து கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தரம் வரையான சமூகக் கல்வி, வரலாறுப் பாடங்களில் பௌத்த சமயத்துக்கான முக்கியத்துவங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வரலாற்றுப் பாடத்திற்குள் பௌத்த சமய நாகரீக வரலாறு எதற்கு என்ற கேள்விகள் தமிழ் கல்வியாளர்களினால் அவ்வப்போது எழுப்பப் பட்டிருக்கின்றன. ஆனாலும் சைவ சமயக் கலைகள் நாகரீகங்கள் அதுபற்றிய வரலாறுகள் மறைக்கப்பட்டு அல்லது பௌத்த சமயத்துக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்டு பாடத்திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆட்சியில் இவ்வாறான இனவாதக் கல்வி முறை ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை தொடருகின்றது. இதற்கும் பல உதாரணங்கள் உண்டு. பொலனறுவையில் உள்ள சைவ சித்தாந்தக் கட்டடக் கலைகள், தற்போது பௌத்த சமயக் கட்டடக் கலைகளாக வரலாற்றுப் பாடப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளன.

அதேபோன்று அனுராதபுரத்தில் எல்லாள மன்னனைக் கொன்றுவிட்டுப் பின்னர் எல்லாளனுடைய வீரதீரச் செயல்கள் மற்றும் நீண்டகாலம் அனுராதபுரத்தை ஆட்சி செய்தமை போன்றவற்றைப் பெருமைப்படுத்தி தேவநம்பியதீசனால் கட்டப்பட்ட எல்லாளன் சமாதியைத் தற்போது தேவநம்பியதீசனின் சமாதியென வரலாற்றுப் பாடப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு சில உதாரணங்களைக் கூறலாம்.

ஆகவே கல்வி ஊடாகவும் இனவாதக் கருத்துக்கள் விதைக்கப்பட்டு எதிர்காலச் சமூகத்தையே முரண்பட்ட சமூகமாக மாற்றக் கூடிய கைங்கரியங்களில் சிங்களக் கல்வியாளர்கள் சிலரும் ஈடுபடுகின்றனர். இது அரசாங்கத்துக்கும் தெரியாததல்ல-

அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்

# கோவிட் - 19 தொற்றாளர்களுக்கு 35 வென்டிலேட்டர்களை வழங்கிய திருத்தந்தை

கோவிட்-19 தொற்றுக்கிருமியால் கடுமையாய்த் தாக்கப்பட்டுள்ள பல்வேறு வளரும் நாடுகளுக்கு, அண்மைய வாரங்களில், 35 வென்டிலேட்டர்களை நன்கொடையாக வழங்கியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இது குறித்து, திருத்தந்தையின் பிறரன்புப் பணிகளை ஆற்றும் அலுவலகம், அறிக்கை வெளியிட்ட வேளையில், கொரோனா கொள்ளைநோயால் பாதிக்கப்பட்டுள்ள பல நாடுகளுடன், குறிப்பாக, நலவாழ்வு அமைப்புமுறை மிகவும் நலிவுற்ற நிலையிலுள்ள நாடுகளுடன் தனது அருகாமை மற்றும் ஒருமைப்பாட்டுணர்வை வெளிப்படுத்தும் விதமாக, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 35 வென்டிலேட்டர்களை வழங்கியுள்ளார் என்று கூறியுள்ளது.

இந்த வென்டிலேட்டர்கள், அந்தந்த நாடுகளின் திருப்பீடத்தூதர்கள் வழியாக அனுப்பப்பட்டுள்ளன என்றும் அறிவித்துள்ள அந்த அலுவலகம், ஹெய்ட்டி நாட்டிற்கு 4, தொமினிக்கன் குடியரசுக்கு 2, பொலிவியா நாட்டிற்கு 2, பிரேசிலுக்கு 4, கொலம்பியாவிற்கு 3, ஈக்குவதோருக்கு 2, கொண்டூராஸ் நாட்டிற்கு 3, மெக்சிகோ நாட்டிற்கு 3, வெனிசுவேலா நாட்டிற்கு 4, காமரூன் நாட்டிற்கு 2, பங்களாதேஷ் நாட்டிற்கு 2, உக்ரெய்ன் நாட்டிற்கு 2, ஜிம்பாப்வே நாட்டிற்கு 2 என, 35 வென்டிலேட்டர்கள் வழங்கப்பட்டுள்ளன என்று கூறியுள்ளது.

## மறைக்கல்வி மாணவர்களுக்கான பரீட்சைகள்

யாழ். மறைமாவட்டத்தில் உள்ள பங்குகளில் மறைக்கல்வி மாணவர்களுக்கான பங்கு மட்டத்திலான பரீட்சைகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

மறைக்கோட்ட, மறைமாவட்ட ரீதியான மறைக்கல்வி மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ளன. இப் பரீட்சைத் திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும். மறைக்கல்வி மாணவர்களுக்கான இப் பரீட்சைக்கான மாதிரி வினாக்கொத்துக்கள் யாழ். மறைக்கல்வி நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம். கொவிட் - 19 நிலைமை காரணமாக ஏற்கனவே திட்டமிட்ட திகதிகளில் பரீட்சைகளை நடாத்த முடியாமையையிட்டு மனம் வருந்துகின்றோம். பங்குத்தந்தையர்களும் மறையாசிரியர்களும் இவ் அறிவித்தலைக் கருத்தில் எடுத்து மாணவர்களைப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்துமாறு மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்பணி X.W. ஜேம்ஸ் அடிகளார் வேண்டியுள்ளார்.

## கோவிட் நோயாளிகளுக்குப் பணியாற்ற அருட்சகோதரிகளுக்கு அழைப்பு

சென்னையில் கோவிட் -19 கொள்ளைநோய் வேகமாகப் பரவிவரும் சூழலில், அந்நோயாளிகளுக்குப் பணியாற்றுவதற்கென சென்னை மயிலை உயர்மறை மாவட்டம் உருவாக்கியுள்ள நலவாழ்வுப் பணியாளர் குழுவிற்கு செவிலியர் பணிக்கெனப் பயிற்சி பெற்ற அருட்சகோதரிகளைத் தந்துதவுமாறு துறவு சபைகளின் தலைவர்கள் மற்றும் மாநிலத் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார் சென்னை - மயிலைப் பேராயர் அதிமேதகு ஜோர்ஜ் அன்ரனிசாமி.



அமரர்.அருட்தந்தை ப.சி. மரியதாசன் அ.ம.தி அடிகளாரின் 100 வது பிறந்த தின நினைவு

அமலமரித் தியாகிகள் சபையில் தன்னை நித்தியத்திற்கும் அர்ப்பணித்து இறைபணியாற்றி 11-03-2011 அன்று இறைபதமடைந்த அருட்தந்தை மரியதாசன் அ.ம.தி. அவர்களின் இவ்வுலகப் பிறப்பின் 100 வது ஆண்டு நிறைவு இவ்வருடம் 2020 ஜூலை மாதம் 02ம் திகதியாகும். இந்நாளில் இந்த அருட்தந்தையை கொடையாகத் தந்தமைக்காகவும் அவரது வாழ்வுக்காகவும், பணிக்காகவும் இறைவனை மகிமைப்படுத்தி நன்றி கூறுகின்றோம்.

காலம் சென்ற திரு திருமதி பஸ்ரியாம்பிள்ளை சிங்கராயர், றோசம்மா தம்பதியினருக்கு மகனாக யாழ்ப்பாணத்தில் மாதகல் கிராமத்தில் 02.07.1920 ஆம் ஆண்டு பிறந்தார். ஜூலை மாதம் 1941ஆம் ஆண்டு இறை அழைத்தலுக்குச் செவிமடுத்து யாழ் புனித மடுத்தினார் குருமடத்தில் இணைந்து கொண்டார். அமலமரித் தியாகிகள் சபையில் தனது முதல் துறவற அர்ப்பணத்தை 08.09.1943 ஆம் ஆண்டும் நித்திய அர்ப்பணத்தை 08.09.1947ஆம் ஆண்டும் எடுத்துக்கொண்டார்.

யாழ்ப்பாணம், மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் மேன்மை தங்கிய ஆயர் இயோம் அ.ம.தி. ஆண்டகையினால் 06.08.1948 ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு நாட்டின் பல இடங்களிலும் பல கஸ்டமான பங்குகளிலும் அயராது இறைபணியாற்றி தனது எளிமையான வாழ்வால் ஆண்டவரை மகிமைப்படுத்தினார். நல்லூர் மிஷன், புனித ஹென்றி அரசர் கல்லூரி, இளவாலை, புனித பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம், அடம்பன், ஊர்காவல்துறை சுருவில், முகமாலை, பாண்டியன்தாழ்வு, மயிலிட்டி போன்ற பங்குகளிலும் தியாகம் நிறைந்த உள்ளத்தோடு தனது எளிமையான பணிவாழ்வால் இறை இயேசுவுக்குச் சான்று பகர்ந்தார். ஈற்றில் 11-03-2011 அன்று தன்னை முழுவதும் இறைவனுக்கு அர்ப்பணித்து இறைபதமடைந்தார்.

02.07.2020 அன்று அடிகளாரின் 100வது பிறந்த நாளைக் கொண்டாடும் நாம், அவருக்காக, அவர் மூலமாக இறைவன் எமக்களித்த பல நன்மைகளுக்காக இறைவனுக்கு நன்றி கூறி அவரை மகிமைப்படுத்துகின்றோம். அருட்தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடுவதோடு, அவர் புனிதர்களின் தோழமையில் இளைப்பாறுகிறார் என்கின்ற நம்பிக்கையோடு எமக்காகவும் பரிந்துரைக்க வேண்டுகின்றோம்.

AD 30 சிங்கராயர் குடும்பத்தினர்.

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 03 | 08 |
| 05 | 07 |
| 1933 | 2010 |



அமரர்
திரு.பிலிப் சூசைப்பிள்ளை
(முன்னாள் ஆசிரியர்)

அநுராதபுரம் புனித சூசையப்பர் கல்லூரி,
யாழ்ப்பாணம் புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்

உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே
என்னிடம் நம்பிக்கை கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான் - யோவான் 11:25

பத்து வருடங்கள் பறந்தோடியும் பற்றும் பாசமும் வேதனையும்
நீங்கவில்லை எமைவிட்டு தரணிக்கீந்த எம் தந்தையே
தன்னகத்தே மீட்டுவிட்டார் இறைவன்
தடயங்கள் நாம் அவர் பாதவடி நோக்கி
தத்தளிக்கின்றோம் தினமும்
இறையடி நின்றெமை ஏங்க வைக்கும் அப்பா
இறையருள் பெற்றெம்மைக் காத்திடுவீர் என்றும்
இதயத்துள் என்றும் பாசமுடன் இணைந்துள்ளீர்கள்
அன்புருவாய் இறைஞ்சுகின்றோம் தினமும் தங்கள்
இறைபாதமிணைந்த ஆன்ம வாழ்வுக்காய்

தகவல்
குடும்பத்தினர்.

AD 34

# காவலன் கலசம்

# கொவிட் - 19 + கல்விப் புலம் + மாற்றம்.......?



கொவிட் - 19 முடக்க காலத்தில் மின்னிதழில் ஒரு செய்தியைப் படித் தேன். இந்தியச் செய்திகள் என்னும் தலைப் பின் கீழ் அது காணப்பட்டது. முடக்க காலத் தில் ஒரு சிறுவன் வீட்டிற்கு அண்மித்து வசிக்கும் ஓர் ஆசிரியரிடம் கல்வி கற்பதற் காகப் பெற்றோரால் வலிந்து அனுப்பப்பட்டி ருக்கிறான். சிறுவனுக்கோ விருப்பமில்லை. எல்லோரும் வீட்டில் இருக்க, தான் மட்டும் ஏன் படிக்கப் போகவேண்டும் என்ற முறுமுறுப்புடன் சென்று வந்த சிறுவன் ஒரு நாள் எரிச்சல் தாங்காமல் நேராகப் பொலிஸ் நிலையம் சென்றுவிட்டான். முறைப்பாடும் செய்தான். பொலிஸார் பெற் றோரையும் ஆசிரியரையும் அழைத்து, ஊரடங்கையும் சுகாதார அறிவுறுத்தல்க ளையும் மீறியமைக்காகப் புத்திமதி கூறி, எச்சரித்து வீட்டிற்கு அனுப்பி வைத்துள்ள னர். கல்வித் திணிப்பிற்கு எதிரான சிறு வனின் எதிர்ப்பு இவ்வாறு வெளிப்பட்டிருந்தது.

**முடக்க காலத்தில் கல்விப் புலம்**

கொவிட் - 19 முடக்க காலத்தில் எமது நாட்டின் கல்விப் புலத்தில் நடைபெற்ற சில முக்கிய விடயங்களை இங்கு குறிப்பிடுகிறேன். இவை மின்னிதழ்கள், மற்றும் சமூக வலைத்தளங்களில் அதி- கமாகப் பகிரப்பட்டவையாகும்.

- க.பொ.த. சா/த பரீட்சைப் பெறு பேறு கள் வெளியிடப்பட்டமை, தமிழ்ப்பிரதேசங் களில் பெறுபேறுகளில் காணப்பட்ட வீழ்ச்சி.
- சமூக வலைத்தளங்களினூடாக வழங் கப்படும் கல்வியும், கற்பித்தலும், அவற்றிற் கான விளம்பரங்களும்.
- இவ் வருடத்திற்கான தரம் 5, க.பொ.த சா/த, க.பொ.த. உ/த பரீட்சைகளும் அவற் றுக்கான ஆயத்தம் பற்றிய கலந்துரை யாடல்களும்.
- மீண்டும் பாடசாலைகளை ஆரம்பித்த லும் அதற்காகப் பின்பற்ற வேண்டிய நடை முறைகளும்

க.பொ.த சா/த பரீட்சையில் வடக்கு மற் றும் கிழக்கின் பெறுபேறுகளின் தொடர்ச் சியான பின்னடைவு தொடர்பாக கல்வி அதிகாரிகள் எடுத்துக் கொண்ட சிரத்தை கள், அதிபர் மற்றும் தரம் 11ல் கல்வி கற் பிக்கும் ஆசிரியர்களுக்கான ஒன்று கூடல் கள், அவற்றுக்கான வகை கூறல்கள் என்ற வகையில் பலத்த நெருக்குவாரங்கள் இக்காலப்பகுதியில்நடந்தேறியுள்ளது. தரம் 5 மாணவர்களுக்கு விசேட வகுப்பு நடாத்தி, பொலீஸாரால் அதிபர் ஒருவர் எச்சரிக்கப்பட்டுள்ளார்.

பாடசாலைகளை பி.ப 3.30 வரை நடாத்தி இழந்த கல்வியை ஈடு செய்ய முனை யும் அரசின் ஆலோசனைகள். சமூக வலைத்தளங்களிலும்தொலைக்காட்சிகளி லும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக் கும் எல்லா வகுப்புக்களுக்கும், எல்லாப் பாடங்களுக்குமான காணொளிகள், அவற் றிலும் இலவசமாகக் கற்பிப்போருக்கு அப்பால் கட்டணம் செலுத்தித் தம்மைத் தேடி வரவேண்டும் என விரும்பும் ஆசிரி யர்கள் சிலரும், தம்மிடத்தில் விசேட கற்பித்தல் திறமைகள் உள்ளன என்ற இறுமாப்பான வெளிப்படுத்தல்களும் கல் விப் புலத்திற்கு ஆரோக்கியமான செயற் பாடுகளாக அனுமானிக்க முடியவில்லை.

கல்விப்புலம் பற்றிய செய்திகள், குறிப்புக்கள், ஆலோசனைகள், விமர் சனங்கள் அனைத்தும் ஒன்றை மட் டுமே வெளிப்படுத்துவதாக உள்ளது. அதாவது மீண்டும் அதே மரபு வழியான கல்வியை மாணவனுக்கு வழங்குதலும், அதே போட்டி மனப்பான்மையை கல்விப் புலம் சார்ந்த எல்லோருக்கும் ஊட்டுவதும், நானே முதலாவது என்ற இடத்தைத் தக்க வைத்துக் கொள்ள என்ன வேண்டுமென் றாலும் செய்யலாம் என்ற மனநிலையை உருவாக்குவதும், அதற்கான பாராட்டுக்க ளையும் வெகுமதிகளையும் பெற்றுக் கொண்டு மகிழ்வதும் பற்றியதாகவே உள் ளது. அதாவது கல்விப் புலத்தில் உள்ள ஒவ்வொருவரும் இதுவரை எதனைச் செய்தார்களோ அதனை இன்னும் கூடிய உத்வேகத்துடன் செய்வதற்குத் தூண் டப்படுகின்றனர்.

**மரபு வழிக்கல்வியின் தோல்வி**

- முன்பள்ளி முதலே பிள்ளைகளுக்கு ஊட்டப்பட்டு வருகின்ற முதலாமிடம் பற்றிய கனவு கலையும்போது பிள்ளைகள் கையறு நிலைக்குப் போவதும் தன்னால் எதுவும் இயலாது என்ற எதிர்மறையான மனநிலைக்குள் தள்ளப்படுவதும்
- வைத்தியர், பொறியியலாளர்ஆகியவை மட்டுமே அதிக வருமானம் உழைக்கக் கூடிய உயர்தொழில்கள் ஏனைய எல்லாம் இரண்டாந்தரத் தொழில்கள் என்ற தொழில் சார் மனப் பாங்கை எமது கல்வி முறை யால் மாற்ற முடியவில்லை.
- பட்டம் பெறும் வரையிலும் இலவசக் கல்வியைப் பெறும் நாம் அதன் பயனைச் சமூகத்திற்குக் கொடுக்கும்போது மட்டும் உயர் வருவாய்க்குப் பின்னால் ஓடுபவராக இருக்கிறோம். இதற்கான சமூக மனப் பாங்கை உருவாக்க கல்வி முறை தவறி விட்டது.
- ஏட்டுச் சுரைக்காயை மட்டுமே வழங்கும் கல்வி முறையால் திறன் விருத்தி இன்மை யும், சுயசார்புப் பொருளாதாரத்தில் ஈடுபட முன்வராத பட்டதாரிகள் உள்ளிட்ட சமூகத் தொகுதியினர் பெரும்பான்மையாகக் காணப்படுதலும்
- படிப்படியாக முயற்சித்து முன்னேறுதல் என்பதற்கு அப்பால் குறுக்கு வழியில் உயர்நிலையை அடைய முயற்சிக்கும் சமூக மனப்பாங்கு எல்லா மட்டங்களிலும் உருவாக்கப்பட்டிருத்தல்
- போட்டிக் கல்வி முறை காரணமாக நாம் முன்னேறுவோம் என்ற சிந்தனை தகர்க்கப்பட்டு நான் மட்டுமே முன்னேற வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கிக் காணப்படுதல்
- இனங்கள், மதங்கள், பிரதேசங்கள் எனப் பெருகி வரும் முரண்பாடுகள் இவை போன்ற அனைத்தும் கல்வி முறை யின் தோல்வியையே சுட்டி நிற்கின்றன.

**எதிர் நோக்கப்படும் மாற்றங்கள்...**

- பிள்ளைகளை இயற்கையுடன் இணைந்து வாழப் பழக்குங்கள். அப் போது கிடைக்கும் அனுபவங்கள் வாழ்

பப்சி.ம

நாள் முழுவதும் மறக்க முடியாத அதி உன்னத கற்றலை அவர்களுக்கு வழங்கும்.

- வைத்தியனாவதும் பொறியியலா ளனாவதுமே வாழ்வின் அதி உயர் இலட்சியம் என உங்கள் பிள்ளைக ளுக்குவெறியூட்டாதீர்கள். வாழ்க்கையை இயல்பாக வாழ்வதற்கு வருமானத் தைப் பெற்றுத்தரும் எந்தத் தொழிலும் மதிப்பிற்குரியதே என்பதை ஏற்றுக் கொள்ளச் செய்யுங்கள்.
- நல்ல மனிதனாக வாழ்வதே நாட்டிற்கும் உலகிற்கும் நான் செய் யும் சேவை எனக்கருதி நற்பெறுமானங் களுடன் வாழப்பழக்குங்கள்.
- உண்மையான ஆன்மீக நிலைத் திருப்பானது, அமைதியையும், மதிப் பையும் ஒவ்வொருவருக்கும் தேடித் தரும் என்பதை உங்கள் வாழ்க்கை முறையால் நிரூபித்துக் காட்டுங்கள்.
- விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களுக்குக் கொடுக்கும் அதே முக்கியத்துவத்தை இசை, நடனம், நாடகம், ஓவியம் போன்ற பாடங்களுக்கும் வழங்க முன்வாருங்கள். அது எமது பிள்ளைகளை ஆரோக்கியமுள்ள உடலும் உள்ளமும் உடையவர்களாக மாற்ற உதவும்.
- பாடசாலைகளில் மாணவர் முன்னேற்ற அறிக்கை வழங்குதல், பெற்றோர் ஆசிரியர் சந்திப்புக்கள் ஊடாக பிள்ளைகளைக் குறைகூறுதல் அல்லது புகழுதல், பரிசளிப்பு விழாக்கள் மூலம் ஒரே மாணவனை உயர்த்துதல், ஏனைய மாணவரைத் தாழ்வுணர்ச்சி கொள்ளச் செய்தல் போன்ற நடைமுறைகளைத் தவிருங்கள். மாறாக ஆசிரியர், மாண- வர், பெற்றோர்கள் ஒரு நாளில் ஒன்றுகூடி மாணவர் திறன் வெளிப்பாடுகளை பார்த்து, மகிழ்ந்து, பாராட்டிச் செல்லுங்கள். சமத்துவம் மலர்வதைக் காண்பீர்கள்.
- பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டி தவிர்ந்த வேறு எப்போட்டிகளை யும் நடாத்துவதைத் தவிருங்கள். குறித்த ஓர் தினத்தில் குறித்த ஓர் விடயத்தை குழுவாகக் கலந்து பேசி விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சியுங்கள். போட்டியில் வெற்றி பெறுவது மட்டுமே வாழ்வின் நோக்கம் அல்ல என்பதை உறுதிப் படுத்துங்கள். இதனால் பிள்ளைகள் சக மாணவர்களைப் போட்டியாளர்களாகப் பார்ப்பது தவிர்க்கப்படும்.
- பாடசாலைகளில் மாணவர்கள் மனஅழுத்தங்களுக்கு உள்ளாவதைத் தவிர்க்க ஏற்ற சூழலைத் தோற்று வியுங்கள்.
- இயலுமானவரை தனியார் கல்வி வகுப்புக்களைத் தவிர்த்து பாட- சாலைகளிலே தரமான கல்வியை வழங்க முயற்சி செய்யுங்கள். பணமுள்ளவன் மட்டுமே கல்வி வாய்ப்புப் பெறுவது தவிர்க்கப்படுவதுடன் பிள்ளைகளுக்கு ஓய்வும் ஆரோக்கியமும் கிடைக்கும்.
- கற்பிக்கும் ஆர்வமுடைய ஆசிரியர்க ளைச் சோர்வடையச் செய்யக்கூடிய வகை யிலான இடர்படுத்தல்களைத் தவிருங் கள். இலங்கைப் பாடசாலைகளில் உள்ள பெரும்பான்மை ஆசிரியர்கள் தொழிற் பயிற்சி பெற்றோர் என்ற வகையில் அவர்களது திறமைகள் வெளிப்பட சந்தர்ப்பம் அளிக்க முன் வாருங்கள்.

நாம் முன்னே எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் மாற்றத்திற்கான முதலடியாகும்.

---



# சட்டமா? மனிதநேயமா? உயர்ந்த நிலையில்

இன்று நாம் வாழுகின்ற சூழமைவுக- ளில் சட்டங்களே இல்லையென்றால் நாம் எல்லோரும் காட்டுவாசிகள் ஆகிவிடுவோம். சட்டங்கள் திசைகாட்டிகள், வாழ்வுக்கு வழி காட்டுபவை. அதேவேளை, சட்டம் ஏமாந்து போனாலும் போகும். உண்மையும், தர்மமும் வென்றேதான் தீரும். "பலிகளை யல்ல இரக்கத்தை விரும்புகின்றேன் என மொழிந்தார் இறை மகன் கிறிஸ்து" (மத்தேயு-12:7) சட்டங்களை இறுக்கமாகப் பிடித்து மனிதத்தைக் கொலைகள் செய்த வரலாறுகள் உண்டு. சட்டங்கள் மனித னுக்கு மேலானதல்ல. சட்டங்களும் ஒழுங்குகளும் மனிதனை நிறைவாகக் காப்பாற்றப் போவதில்லை. இரக்கச் செயல் களே காப்பாற்றும். எமக்கு இறுதி நாட் களில் தீர்ப்பிடப்போகும் அளவுகோல், நாம் செய்த நற்செயல்களே அல்லாமல் சட்டங்கள் அல்ல. எமது வாழ்நாளில் எத் தனை முறை ஆலயங்களுக்குச் சென்றுள் ளோம் என எமது இறுதி நாளில் கணக்கு காட்டவல்ல. நாம் வாழ்வது எப்படியான வாழ்வின் பெறுபேறுகள் காணப்பட்டது என்பதுதான் எம் வாழ்வுப் புத்தகத்தின் கணக்குப்பதிவாகும். சட்டங்கள், சுமை களாக மாறக்கூடியது. இன்று சட்டத்தை வைத்து மனிதனைக் கொல்பவர்

வன்னி வாழ் இதயம்
ம.ஆசைமுத்து

களும் உண்டு. இவர்களும் ஒருவிதத் தில் மனிதநேயம் இல்லாத அதிகார வர்க்கத்தினர்.

சட்டங்கள் மனிதனின் மாண்பைப் பாதுகாக்க வேண்டும். இவ்விடயத்தில் இறைமகன் இயேசு. ஓய்வுநாளுக்காக மனிதன் அல்ல. மனிதனுக்காகவே ஓய்வு நாள் என்றார் (மாற்கு. 2 : 27) பாரம் பரியங்களைப் பேணுகிறோம் என்று சொல்லிக்கொண்டு சாதாரண மக்களை ஓரம் கட்டுபவர்களும் உண்டு.

சட்டங்கள் தேவைதான். எது சரி எது பிழையெனத் தெரிந்து கொள்ள வழி காட்டுகிறது. எமது திருத்தந்தை அவர்கள் கூறுவதுபோல்பாவத்தைவெறு. பாவியை வெறுக்காதே என்பது சட்டத்தை வைத்து மனிதனை நசுக்காதே என்பதற்கு ஒத்ததாகும்.

அதிகாரங்கள் மனிதனுக்கு ஆண்டவரால் வழங்கப்பட்டது. தூய்மை யான நீதியான பணிவிடை செய்வதற் காகவே தவிர, மக்கள் மத்தியில் பார பட்சம் காட்டுவதற்கல்ல. அதேவேளை அவற்றைப்பயன்படுத்துவோரும் உண்டு. பணி செய்து வாழ்வதே அதிகாரத்தின் அடிப்படை ஊழியம் செய்வதே அதிகாரத் திற்கு இன்னொரு பெயர். இறைமகன் இயேசு கற்பித்த பாடம்.

புதிய வரைவிலக்கணம். சட்டங்கள் மேலோங்குகின்ற போது, மனிதம் மகிழ் கின்றது. மனிதத்திற்கு உலை வைக் கின்றார்கள். நீதியை நிலை நாட்டுகி றோம். எனச் சொல்லிக் கொண்டு சட்டத் தைப் பயன்படுத்தி அநீதி செய்பவர்களும் உண்டு. உண்மையை நிலை நாட்டுபவர் களை ஒதுக்கிவிட்டு பகட்டான வாழ்வு வாழ்கின்றவர்களைத் தேடிச் செல்கிறார் கள். இதுதான் இன்றைய கலாசாரம் ஆகின்றது.

பாவம் செய்து பிடிபட்ட பெண்ணை சட்டப்படி கல்லால் எறிந்து கொல்லப்பட வேண்டியவள் அதேவேளை இரக்கத் தின் மகுடமாகிய இறைமகன் இயேசு. அங்கு பிரசன்னமாக இருந்து கருணை உள்ளத்தில் உயர்ந்து நிற்கிறார். பாவம் இல்லாதவன் முதலில் கல்லை எறியட்டும் என்ற ரீதியான வார்த்தையை முன்வைக் கின்றார். குற்றம் சாட்டியவர்களின் சட்டம் தோற்றுப் போகின்றது.

மனிதன் இறக்கும் போது எல்லாவற்றையும் விட்டுத்தான் செல்ல வேண்டும். கிறிஸ்தவர்கள் நாம் அப்படிச் செல்ல முடியாது. எமது வாழ்வின் போது நாம் செய்த மனிதநேய இரக்கச் செயல் களைச் தாங்கிச் செல்ல வேண்டும். இதுதான் உண்மை. சட்டங்கள் செல்லு படியாகா இயேசுவின் இரண்டாம் வரு கைக்கு நாம் தயாரா?..

## காவலன் கலசம்

# நல்ல நட்பு

உலகிலே மனிதன் பலவகையான பயங்களுக்கு உள்ளாக்கபட்ட நிலையில் வாழ்ந்து வருகின்றான். அவனை வறுமை, வருத்தம், யுத்தம், மரணம், தனிமை போன்ற பயங்கள் ஆட்டிப் படைக்கின்றன. அன்பும் நட்பும் அவனது அடிப்படைத் தேவைகளாக அமைவதை அவதானிக்கலாம். மேலும், திரைப்படங்கள், கவிதைகள், புத்தகங்கள் போன்றவற்றில் நட்புக்கான தாகம் பரவியிருப்பது வெளிப்படை.

எல்லா மனிதரது வாழ்விலும் நட்புடமை பெரும் பதிவை ஏற்படுத்தி வருகின்றது. அடிப்படை மதிப்பீடுகளில் நட்பு சிறப்பிடத்தை வகிக்கின்றது. சர்க்கரை இல்லாத பொங்கல் போல நட்பு இல்லாத வாழ்வு நிறைவில்லாததாக இருக்கின்றது. வாழ்விற்கான மருந்தாக விசுவாசமுள்ள நண்பன் விளங்குகின்றான்.



"மூன்று விசுவாசமுள்ள நண்பர்களாக வயதான மனைவி, வயதான நாய், தேவைக்கான பணம் ஆகியவை விளங்குகின்றன" என்று விளக்கம் அளித்தார் பெஞ்சமின் பிறாங்ளின். உண்மையான நட்பு அனுபவிக்கப்படாவிடில் ஏமாற்றம், அந்நியப்படுத்தப்படல், கசப்புணர்வு, காயப்படுத்தப்படல் போன்றவையே எஞ்சி நிற்கும். பிறர்மீது பழிபோடுவது நல்லது அல்ல. உங்களது தவறுகளுக்கு நீங்களே பொறுப்பு. பிறர்மீது பழிபோட்டுத் தப்பி ஓடுவது முறையற்ற செயலே.

நேர்மையின் வலு இல்லாத பொழுது நீங்கள் பிறரையும் உங்களையும் ஒருங்கே மட்டம் தட்ட வேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்படுகின்றீர்கள். உங்களது அசைவுகளுக்கு நேர் மதிப்பைப் பதிவுசெய்து, உங்களது இருப்பு நிலையை உறுதிப்படுத்துங்கள். நல்ல நட்பு உண்மையானது. உள்ளத்தைத் தொடக்கூடியது. தூய்மையானது. துணிச்சல்மிக்கது. நல்ல நட்பு பல பண்புகளைத் தன்னத்தே கொண்டது.

**1வது, நம்பகத்தன்மை:**

நம்பகத்தன்மை ஒருவரிடம் நலிவுற்றுக் காணப்படுமிடத்து அவர் நல்ல நண்பராயிருக்கும் வாய்ப்பை இழந்துவிடுகின்றார். நம்பகத்தன்மை இலகுவில் பெறக்கூடிய ஒன்றல்ல. மிகவும் கஸ்ரப்பட்டே, மனம் வைத்தே அது உருவாக்கப்படக்கூடியது. நட்பு நேர்மையை அடிப்படையாகக் கொண்டதாய், போலிகளைப் புறநீங்கல் செய்கின்றது. உங்களை நீங்களாக வெளிப்படுத்துவதற்கு நட்பு நேர்மையை உள்வாங்கி, வெளிவிடுங்கள். நம்ப நடத்தலும் நம்பி நடத்தலும் உங்களது நட்பை நிறைவாக்கி நிலைநாட்டுகின்றது.

**2வது கொடுத்தல்:**

நல்ல நட்புக்கு அடையாளம் நிபந்தனையில்லாக் கொடுத்தலேயாகும். ஆள், இடம் பாராமல் கொடுக்கப் பழக்கப்பட்டவர் நட்பை இலகுவில் வெளிக்காட்டி நிற்பார். எடுப்பதில் அல்ல, கொடுப்பதில் தான் அன்பு அர்த்தம் பெறுகின்றது. எதைக் கொடுக்கின்றீர்கள் என்பதல்ல அதை அன்போடு கொடுக்கின்றீர்கள் என்பதில் தான் நட்பு அர்த்தம் பெறுகின்றது. மற்றவர்களுக்காக உங்களை, உங்களிடம் உள்ளவற்றை அன்போடு கொடுக்கப் பயிற்றுவிக்கப்பட்டால் உங்களது நட்பு பலப்படுத்தப்படும். நல்ல நண்பன் உங்களைத் தெரிந்தவராயும் அன்பு செய்பவராயும் காணப்படுவார்.

**3வது கிடைக்கும் தன்மை:**

இரு நல்ல நண்பர்கள் இடையே கிடைக்கும் தன்மை பெரிதாகக் காணப்படும். இருவரும் ஒருவர் சார்பாக மற்றவர் சேர்ந்தே செயற்படுவர். ஒருவர் மற்றவருக்காகக் காத்திருப்பது. ஒருவர் தன்னிடமுள்ளவற்றை மற்றவர் பெறும்படியாக வைத்திருப்பது சாதாரணமாக இருக்கும். இருவரும் சமநிலையில் சஞ்சரிப்பது இயல்பாக இடம்பெறும்.

**4வது மன்னிக்கும் மனப்பான்மை:**

"நண்பரது குறை குற்றங்களைப் புதைப்பதற்குப் பெரிய சேமக்காலை தேவைப்படுகின்றது" என்று அமெரிக்க நாட்டுப் போதகர் பீச்சர் எதிர்வுகூறினார். உங்களது நண்பர் தவறு செய்வதற்கென முன்கூட்டியே இடம் ஒதுக்குங்கள். உடை, உறையுள் தேவைப்படுவதுபோல மன்னிப்பு வழங்கல் அவசியமாகத் தேவைப்படுகின்றது. நல்லவை எல்லோருக்கும் கிடைக்கும் விதமாக சூழல் மாற்றம் இடம்பெறவேண்டும். கூடுதலானோர் மன்னிப்புப் பெறுமாறு மன்னிப்பு நிகழல் வேண்டும்.

**5வது, நட்பு மற்றவரிலுள்ள வேறுபாடுகளைக் கண்டுணர்ந்து ஏற்றுக் கொள்கின்றது.**

உங்களில் மலிவாகக் காணப்படும் பெருமை, சுயஅன்பு போன்றவற்றை வெல்லக் கற்றுக் கொள்ளுங்கள்.

உங்களில் இயல்பாயிருக்கும் நன்மைத்தனங்களை இழக்காதிருங்கள். நம்பகத்தன்மையுள்ள நட்பு அழகானது. அற்புதமானது. உங்களை நீங்களாகவே வெளிக்காட்டுவது நட்பில் சாத்தியமாகின்றது.

உங்களையும் உங்களது நண்பரையும் மதிப்பீடு செய்யவும் நுட்பமாக விசாரிக்கவும் திறன்வளர்த்தலை மேற்கொள்ள வேண்டிய தேவை நல்ல நட்புறவில் எழுகின்றது. இது மற்றவர்கள் காரியத்தில் அநாவசியமாகக் குறுக்கிடுவது அல்ல. மாறாக, மற்றவரது சுதந்திரத்தை மதித்து, உண்மையான உறவினைப் பலப்படுத்துவதாகும். இது மற்றவரது நியாயமான தேவையை நிறைவு செய்ய எத்தனிப்பதாகும். இது

**அருட்கலாநிதி வின்சன் பற்றிக்**

பெருந்தன்மையோடும் திறந்த மனப்பான்மையோடும் முன்னெடுக்கப்படும் ஆளுமைப் பரஸ்பரப் பகிர்தலாகும்.

**6வது, நட்பு துணிச்சல்மிக்கது**

எல்லா எதிர்வினைத் தாக்கங்களையும் எதிர்ப் புக்களையும் துணிச்சலோடு எதிர்கொள்ளும் ஆற்றலை நல் நட்பு வேண்டிநிற்கின்றது. எதிர்மறைச் சிந்தனைகளை வெல்லும் சக்தி இங்கு பரவலாகக் கிடைப்பது அவசியம். ஏமாற்றம், பேராசை, நன்றியீனம், கர்வம், பிறருக்குக் கெடுதல் செய்யும் அவா, வெறுப்பு போன்றவற்றை முறியடிக்கும் வல்லமை அவசியமாகத் தேவைப்படுகின்றது. பிரச்சனைகள், மனமுறிவுகள், தோல்விகள் மத்தியிலும் நீங்கள் மக்கள் சார்பாக, வாழ்வு சார்பாக அசையும் ஆற்றலை அன்றாடம் வளர்த்துத் தக்கவைப்பது நல் நட்பின் உட்கிடையாகும். சமத்துவ சங்கமத்தில் மற்றவர்களை ஏற்றுக் கொள்ளத் துணிச்சலோடிருங்கள். எதிர்மறைச் சிந்தனைகளிலிருந்து உங்களை விடுவித்துக் கொள்ளுங்கள்.

**7வது, நட்பு சக்திவாய்ந்தது.**

இது ஒரு தொடர் முயற்சியாகும். உங்களிலும் மற்றவர்களிலும் நன்மைத்தனத்தைக் கண்டறியும் பரபரப்பான பயணமாகும். இது ஒருபோதும் முடிவிற்கு வராத நாளாந்தத் தேடலாகும். இது உங்களிலும் பிறரிலும் பரஸ்பரம் கொடுக்கின்ற, அகமகிழ்கின்ற தேடலாகும். நேர்மையாகவும் தொடர்முயற்சியாகவும் தேடப்படும் நட்பு நிட்சயமாக ஒருநாள் கிடைக்கும்.

'எப்பொழுதும் அன்பான சொற்களைப் பயன்படுத்துங்கள். மென்மையாகப் பேசுங்கள். நண்பர்கள் பெருகுவார்கள்" என்று சிந்திக்க அழைக்கின்றார் சுவாமி சின்மயானந்தர். இதமாகவும் இனிதாகவும் பேசி, நல்வாழ்வினை நல்கிட முன்வாருங்கள்.

உண்மையான நட்பு இருவர் சார்பான இருவழிப் பாதைப் பயணம். அன்பு செய்வதும் அன்பு செய்யப்படுவதும் அள்ளிக் கொடுப்பதும் அதிகம் பெறுவதும் நட்பின் அரிய பண்புகளாகும். எதிர்பாராது எழுந்த ஏமாற்றங்களை, தொடர்ந்து வந்த தோல்விகளை, உள்ளக் குமுறல்களை வெளிக்காட்டி உள்ளார்ந்த ரீதியாகத் தொடர்பாடலை மேற்கொள்ள நல்ல நண்பர்களே உதவுகின்றார்கள். நொந்துபோன வேளைகளில் மேலும் வெந்துபோகாமல் காப்பவர்கள் நல்ல நண்பர்களே ஆவர். துன்புற்று வாழும் இதயங்களை இன்புறச் செய்யும் நல்வழிகாட்டிகளாக நண்பர்களே திகழ்கின்றார்கள். தேடும் உறவுகளில் தென்றல் வீசச் செய்யும் நல்ல நண்பர்கள் என்றும் ஆசி பெற்றவர்களே.

*நல்ல நட்பு*
*"பாய்ந்தோடும் நதிக்கு ஒப்பானது.*
*நல்ல நண்பர்கள் சேர்ந்துவாழின்*
*இல்லம் இனிதாகும்.*

## எரிச்சல் வேண்டாமே!



"நீ எரிச்சலாயிருக்கிறது நல்லதோ?" எனறு பைபிளில், யோனா அதிகாரம் 4:9 வசனம் அமைந்துள்ளது. யோனா என்பவர் மிகவும் எரிச்சல் உள்ளவராக இருந்தார். அவர், ஒரு ஆமணக்குச் செடியின் நிழலில் படுத்து உறங்குவது வழக்கம். ஒருநாள் அங்கு படுக்கச் சென்ற போது, செடியைப் பூச்சி அரித்திருந்ததைக் கண்டார். தனக்கு இடம் கொடுத்த அந்தச் செடி கூட, அழியும் நிலைக்கு வந்துவிட்டதால் விரக்தியடைந்த யோனா எரிச்சலுடன், "நான் வாழ்வதைவிட, சாவதே நலமாக இருக்கும்," என்றார். இவரைப் போலவே பல சகோதரர்கள் இருக்கிறார்கள். ஒரு சிலர் அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு வந்ததும் மனைவி, குழந்தைகளிடம் எரிச்சல்படுவார்கள். அதன்காரணமாக, கையில் கிடைத்த பொருட்களை எல்லாம் தூக்கி எறிவார்கள். காயீன் என்பவன், கர்த்தருக்குக் காணிக்கை ஒன்றைக் கொடுத்தான். ஆனால், அதை அவர் அங்கீகரிக்கவில்லை. இதன் காரணமாகஏற்பட்ட எரிச்சலால் தன் சொந்தச் சகோதரனையே கொலை செய்துவிட்டான். இதனால் அவன் பல சாபங்களை அனுபவிக்க வேண்டியதாயிற்று. நாம் நினைத்தது நடக்கவில்லை என்பதற்காக எரிச்சல் கூடாது. கஷ்டமான நேரத்திலும் சாந்தமாக இருக்கப்பழக வேண்டும்.

## இளையோர் காவியம்

இடி விழாதபடி பொருத்தப்பட்ட நீ
இடி தாங்கி

உன் நிழல் கூட அந்தரிக்கும் '
மனங்களுக்குத் துணை நீ
எப்பவும் உறவுகளின் பாதுகாப்பு வலயம்

உன் சிறகுகளை நம்பி எழுந்து பறக்கிறது
முறிந்த சிறகுகள்

நீ முளைத்தால்தான் தளைக்க முடியும்
என்பது இயற்கையின் தத்துவம்

உன் தொழுகை கூட
வல்லரசுகளிடம் இல்லாத ஆயுதம்

நீ வார்த்தைகளில் மட்டுமல்ல
இதயத்திலும் வைத்திருக்கிறாய்
வரவேற்பு வாசல்

உன் முகமூடி போடாத அன்பு
சோர்ந்து போன உள்ளங்களுக்குத்
தெம்பு

நீ சட்டத்தின் நீதிபதி அல்ல
கடவுளுடைய நீதிபதி

உன் முடிவுகள் மட்டும்தான்
இருளைக் கழுவப் போகிற சூரியன்

கடவுள் உன்னிடம்
தந்த பொறுப்புகளில்
முதல் கவனிக்க வேண்டியது
உயிர்கள்
நீ காணாமல் போன
மந்தைகளைத் தேடு

இறப்பு வாழ்க்கைக்குப் போட்ட
தலைப்பு கண்ணீர் மட்டுமல்ல
நீ எழ ஆறுதலாய் இருப்பது
மட்டுமல்ல துயருறுவோரை
வாழ்க்கைப் பாதையில் தூக்கி நடத்து

**உயிரோவியன்**

## தோல்வி

*என்னைச் சந்திப்பவர்கள் வெற்றியடையாமல் போவதில்லை இப்படிக்குத் தோல்வி.*

மற்றவர்களை வளர்த்துவிட, குழும ஒற்றுமைக்காக விட்டுக் கொடுத்து, வம்பு வரும்போது முன் சென்று மன்னிப்பு கேட்டு, பலமுறை காயப்பட்டாலும் மற்றவர்களைக் காயப் படுத்தாமல், தோற்றுப் போவோம். அனைவரும் வாழ்வு பெற நம்மை வளைத்துக் கொடுத்துத் தோற்றுப் போவோம். வம்பு செய்பவர்களையும் அன்பு செய்து தோற்றுப் போவோம். நம்மை நேசிக்காதவர்களுக்கு நேரம் அறிந்து உதவி செய்து தோற்றுப் போவோம். இகழ்ந்து பேசுபவர்களைப் பற்றி நல்லதையே பேசித் தோற்றுப்போவோம். உபத்திரம் செய்பவர்களுக்கு உதவி செய்து தோற்றுப் போவோம். அப்போது ஆன்மீக வாழ்வில் வெற்றி காண்போம்.

## காவலன் கலசம்



34

# அவசரகாலப் பதில்?

அருட்தந்தை செ. அன்புராசா, அமதி அடிகளார்
**'என் கேள்விக்கென்ன பதில்!'**
என்ற பகுதியை கடந்த வாரம்வரை எழுதிவந்தார். காலத்தின் அறிகுறி-களைக் கருத்தில் கொண்டு அவரின் பதில்கள்
**'அவசரகாலப் பதில்'**
என்ற தலைப்பில் தொடர்ந்து வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். வாசகர்களாகிய நீங்கள் கேள்விகளைக் கேட்டு பயனடைய இப்பகுதியைப் பயன்படுத்துங்கள். ஆர்

*(செல்வம், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: கொரோனா ஊரடங்குக் காலத்தில் மக்கள் ஆன்மீகத்தில் வளர்ந்து இருக்கின்றார்களா அல்லது ஆன்மீகத்தை இழந்து இருக்கின்றார்களா?**

ப: கொரோனாவுக்கு முன், கொரோனாவுக்குப் பின் என இக்கேள்விக்கான விளக்கத்தினைத் தேடலாம்! கொரோ னாவுக்குப் பின் மக்களின் வாழ்க்கை முறைகளை - வாழும் வகைகளைப் பார்த்துத் தான் ஆன்மீகத்தில் வளர்ந்து இருக்கின்றார்களா அல்லது தேய்ந்து இருக்கின்றார்களா எனக் கூறமுடியும்!

*(சுசி, யாழ்ப்பாணம்)*

**கே: நாம் வாழும் இந்த விஞ்ஞான உலகில், கண்ணுக்குத் தெரியாத இந்த கோவிட் 19 வைரசுக்கு மருந்துகளை கண்டுபிடிக்க முடியாமலும் இதனைக் கட்டுப்படுத்த முடியாமலும் இருக்கின்றது என்பதைச் சிந்திக்கும்போது ஆச்சரியமாக இருக்கின்றது! நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**

ப: கண்ணுக்கு நன்றாகத் தெரிந்த டெங்கு நுளம்பையே கட்டுப்படுத்த முடியாமல் தவிக்கும் நாங்கள், கண்ணுக்குத் தெரியாத கோவிட் 19னைக் கட்டுப்படுத்த முடியாமல் இருப்பது என்பது எனக்கு ஆச்சரியமாகத் தெரியவில்லை!

(மதன், மன்னார்)

**கே: இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உண்மை நிலையை அறிதல் போன்றவற்றுக்கான தீர்வுகள் இனி யாவது வருமா?**

ப: 2009ஆம் ஆண்டிலிருந்து வ.... ந்து கொண்டுதானே இருக்கின்றது!... நம் நாட்டுத் தலைவர்களையும் நம் நாடாளு மன்றப் பிரதிநிதிகளையும் பார்க்கின்ற போது, வரும் ஆனால் இந்த நூற்றாண்டில் வந்துசேருமா என்பதுதான் கேள்வி! இன்னுமொரு வகையில் கூறுவதானால், 'வறும் ஆனா வறாது!' என்றும் சொல்லலாம் போல் தோன்றுகின்றது!

*(மல்லிகா, முல்லைத்தீவு)*

**கே: ஈஸ்ரர் தாக்குதல் விசாரணைகள் பாரபட்சமின்றி நடத்தப்பட வேண்டுமென மீண்டும் மீண்டும் பல தடவை-கள் கொழும்புப் பேராயர் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். அது நல்லது, வரவேற்கத்தக்கது. ஆனால், எமது ஆலயங்களில் குண்டு வெடிப்புக்களில் கொல்லப்பட்டது குறித்தோ அல்லது முள்ளிவாக்காலில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டது பற்றியோ நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டுமேன பேராயர் அவர்கள் ஒருதடவைகூடக் கூறியதில்லை! இப்பேர்ப்பட்டவர்களை நினைக்கின்றபோது மிகுந்த வேதனையாக இருக்கின்றது? ஏன் இந்த வேறுபாட்டினைக் காட்டுகின்றார்கள்?**

ப: இங்கு உயிரிழந்தவர்கள் பதர்கள்! அங்கு உயிரிழந்தவர்கள் பருப்புக்கள்!

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கே: தேர்தலுக்குத் திகதி குறித்தாயிற்று! தேர்தல் நடக்குமா நடக்காதா? நடந்தால் எப்படி நடக்கும்?**

ப: நடக்கும்! திட்டமிட்டபடி என்று கூறுவதைவிட திட்டம் தீட்டியபடி நடக்கும்!

(சுரேஸ், மன்னார்)

**கே: கூட்டமைப்பின் தலைவர் கௌரவ இரா. சம்பந்தன் நல்ல திடமாக இருக்கின்றாரே என்ன காரணமோ!?**

ப: தேர்தல் காலங்களில் அவர் திடமாகத்தான் இருக்கிறவர்!

*(மதி, யாழ்ப்பாணம்)*

**கே: வடகிழக்குப் பிரதேசங்கள் முழுமையாக இராணுவ மயமாகிய நிலைமையையே அவதானிக்கக் கூடிய-தாக இருக்கின்றது! என்னாகுமோ!?**

ப: 'எல்லாம் இன்பமயம்' எனக் கூறப்பட்டிருப்பதைக் கேட்டிருப்பீர்கள்! இங்கு இப்போது 'எல்லாம் இராணுவமயம்' என ஆகியிருக்கின்றது. ஆக, 'இன்ப மயம்', 'இராணுவ மயம்' ஆகி வருகின்றது! அவ்வளவு தான்.

**அருட்பணி செ. அன்புராசா**

*(கண்ணன், யாழ்ப்பாணம்)*

**கே: மீண்டும் வீதி விபத்துக்கள் அதிகமாகி விட்டனவே! என்ன காரணமோ?**

ப: நீண்ட இடைவெளியின் பின்னர் மீண்டும் 'றேஸ்' தொடங்கி விட்டது! அது தான்.

*(சுதர்சன், கிளிநொச்சி)*

**கே: மற்றவர்களை அடக்கியாள நினைப்பவர்கள் குறித்து என்ன நினைக்கின்றீர்கள்?**

ப: அவர்கள் பற்றி நினைக்க என்ன இருக்கின்றது! அவர்களும் பரிதாபத்துக்குரிய அடிமைகள்தான்! 'அடிமைப் படுத்துபவனும் அடிமை, அடிமைப் படுத்தப்படுபவனும் அடிமை!' காரணம், இரு சாராருக்கும் தங்கள் தங்கள் அடிமை நிலைகளிலிருந்து விடுதலை பெறவேண்டி இருக்கின்றது!

*(டினோசா, யாழ்ப்பாணம்)*

**கே: சிலர் மனம் திறந்து மற்றவர்களின் திறமைகளைக் குறித்தோ அல்லது அடைவுகளைக் குறித்துப் பாராட்ட முடியாத மனம் படைத்தவர்களாக இருக்கின்றார்களே! ஏன்?**

ப: மனம் இருந்தால் மட்டும் போதாது நல்ல மனம் வேண்டும். நல்ல மனம் படைத்தவர்களிடம்தான் மற்றவர்களை தட்டிக்கொடுக்கும், உற்சாகப்படுத்தும் நல்லெண்ணம் தோன்றும்!

*(சுரேஸ், மன்னார்)*

**கே: 'தமிழர்கள் ஒருபோதும் அடிபணிய மாட்டார்கள்! அடக்குமுறைகளை தகர்த்தெறிந்து சாத்வீக ரீதியில் போராடுவார்கள்!' என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அண்மையில் தெரிவித்திருக்கிறார். நடக்கவே கஸ்ரப்படுகின்ற இவர் அடக்குமுறைகளை எதிர்த்து சாத்வீக ரீதியில் எப்படிப் போராடப் போகிறார்!?**

ப: தமிழர்கள் அடிபணிய மாட்டார்கள் தான். ஆனால், கொடி பிடிப்பார்கள்! அதனை 2015 இல் யாழ்ப்பாணத்தில் நல்லாட்சி அரசுடன் இணைந்து அவர் செய்துகாட்டி இருக்கின்றார். தொடர்ந்து இவ்வாறுதான் செய்யப்போகிறார். அதனைத் தான் அவரது பாணியில் சொல்லியிருக்கின்றார் போலும்!

## இருப்பதை நினைத்து மகிழலாமே!

அன்று தென்றல் ஒரு பாறையைக் கடந்துபோனது. அது போகும்போது அந்தப் பாறையின் மேல் ஒரு சிறிய விதை கிடந்ததைப் பார்த்தது. உடனே தென்றல், அந்த விதையிடம், நீ இருக்கிற இடத்தைப் பார்த்தாயா, அது ஒரு பாறை. அங்கு உன்னால் எதுவும் செய்ய முடியாது. அதனால் என்னோடு வந்துவிடு. நான் உன்னை பாதுகாப்பாக ஒரு நல்ல நிலத்தில் விட்டுச்செல்கிறேன். நீ வளர்ந்து பெரிய மரமாகி விடுவாய் என்று சொன்னது. அதற்கு அந்த விதை, பரவாயில்லை, நீ உனது வழியில் செல். நான் எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எப்படியாவது உயிர்வாழ முயற்சி எடுக்கிறேன் என்று சொல்லி, தென்றலோடு செல்ல மறுத்துவிட்டது. தென்றலும் தன் வழியே சென்றது. ஆறுமாதம் சென்று அந்த தென்றல் அதே வழியில் வந்தது. அந்த இடத்தில் ஒரு மரத்தைப் பார்த்ததும், தென்றலுக்கு வியப்பு. நீ அந்த விதைதானே, ஆறு மாத காலத்திற்குள் நீ எப்படி இவ்வளவு பெரியதாக வளர்ந்திருக்கிறாய் என்று கேட்டது, தென்றல். அதற்கு அந்த விதை, நான் இந்த இடத்தில் கிடைத்த ஒரு சிறிய மழைத்துளியைப் பயன்படுத்தி, என் வேரை ஊன்றினேன். பின்னர், என் வேரைப் பரப்பி இன்று ஒரு பெரிய மரமாக வளர்ந்திருக்கிறேன். ஆக, நான் எங்கே இருக்கிறேன் என்பது முக்கியமல்ல, எனது மனநிலை எப்படி இருக்கின்றது என்பதுதானே முக்கியம். அதனால்தான் இன்று இவ்வளவு பெரிய மரமாக நான் உருவாக முடிந்தது என்று சொன்னது.

**கதை சொல்லும் பாடம்**

**சிந்தனைக்கு**

நாம் வாழ்வில் முன்னேறாமல் இருப்பதற்கு பலநேரங்களில் மற்றவர்களையே குறைசொல்லிக்கொண்டிருக்கிறோம். அத்தோடு, இல்லாததை நினைத்துப் பலநேரங்களில் வருந்திக்கொண்டிருக்கிறோம். அதற்கு மாறாக, இருப்பதை வைத்தே வாழ்வில் முன்னேறத் தொடங்கியிருந்தால், இதற்குள் வாழ்வு எப்படியோ உயர்ந்திருக்கும். எனவே இருப்பதை நினைத்து மகிழ்ந்து முன்னேற முயற்சிப்போமா!



## பாவ மன்னிப்பு

**பாவங்கள் எவ்வாறு மன்னிக்கப்படுகின்றன?**

கிறிஸ்து உயிர்த்து விண்ணகம் செல்லும் முன் தூய ஆவியை திருத்தூதர்கள் மேல் பொழிந்து, உலகில் மனிதரின் பாவங்களை மன்னிக்கும் அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுத்தார். (யோவா 20:22-23)

1. திருமுழுக்கு வழியாக நாம் பிறப்பு நிலை பாவத்திலிருந்து கழுவப்பட்டு கிறிஸ்துவோது இணைக்கப்படுகிறோம்.
2. திருமுழுக்கு பெற்ற பின் நாம் உலகில் வாழும் நாட்களில் உலகதீய நாட்டங்களினால் கட்டிக்கொள்ளும் பாவங்களுக்கு ஒப்புரவு அருளடையாளம் (Sacrament of Penance) வழியாக மன்னிப்பைப் பெற்று மீண்டும் இறைவனோடு இணைக்கப்படுகின்றோம். (976-980)

**திருஅவை பாவத்தை மன்னிக்க முடியுமா?** முடியும்

- இயேசு தாமே பாவங்களை மன்னித்து மனிதரை பாவத்திலிருந்து விடுவிக்கும் பணியையும் அதிகாரத்தையும் திருஅவைக்கு வழங்கியுள்ளார்.
- பாவத்தை ஏற்று, அதற்காக மனம் வருந்தி, அதனை அறிக்கையிட்டு, மன்னிப்புப்பெற முன்வரும் எவருக்கும் தமது குருத்துவப் பணியின் அதிகாரத்தால் குருவானவர் அவரின் பாவங்களை மன்னிக்க முடியும்.
- குருவானவர் பாவக்கறைகளை முழுமையாக நீக்கிய தன் விளைவாக, ஒருவர் பாவத்தைக் கட்டிக்கொள்ளாதபோது எத்தகைய பரிசுத்தத்தோடு இருந்தாரோ, அதே பரிசுத்தமாக அவர் தூய்மையாக்கப்படுகிறார்.
- இயேசு பாவங்களை மன்னிக்கும் இறைவல்லமையில் குருவானவருக்கு பங்களித்திருப்பதால் மட்டுமே இது சாத்தியமாகிறது.
- லூக். 24:47 'பாவமன்னிப்புப் பெற மனம் மாறுங்கள்' என எருசலேம் தொடங்கி அனைத்து நாடுகளிலும் அவரு-டைய பெயரால் பறைசாற்றப்படவேண்டும் யோவா 20:23 எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ அவை மன்னிக்கப்படா என்றார்.
- திருத்தூதர்களும் அவர்கள் வழி வருபவர்களும் (ஆயர்கள், குருக்கள்) இயேசுவிடமிருந்து பெற்றுக்கொண்ட அதிகாரத்தின் வழியாக இந்த ஒப்புரவுப் பணியைச் செய்து வருகிறார்கள்.
- பாவ வழியை விட்டு விலகி வரும் எவருக்கும் இரக்கத்தின் வாயிலை, மன்னிப்பின் வாயிலை திருஅவை எப்போதும் திறந்தே வைத்திருக்க வேண்டும். காரணம் இயேசு அனைவரையும் மீட்கவே தம்மைப் பலியாகக் கொடுத்தார். எத்துணை பெரிய பாவமாக இருந்தாலும் ஒருவர் உண்மையிலேயே வருந்தி, திருந்தி மன்னிப்பு வேண்டினால் திருஅவையால் மன்னிக்க இயலும். (981-983)

# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை

## பின்னணி, தோற்றம், வளர்ச்சி



**கிழக்கு மாகாணம் - திருகோணமலை, மட்டக்களப்பு**

கிழக்கு மாகாணத்தில் பாரிய நிலப்பரப்பு செழிப்பற்ற, கைவிடப்பட்ட நிலப்பரப்பாகவேயுள்ளமை குறிப்பிடத்தக்கது. மக்கள் குடியிருப்புக்கள் கடற்கரையோரங்களில் அல்லது அதற்கருகாமையிலுள்ள பகுதிகளில் தான் உள்ளன. இங்கு குறிப்பாக ஒன்றிலிருந்து மற்றது வெகு தொலைவிலுள்ளதாக இரண்டு மறைத்தளங்கள் உள்ளன. இவ்விரண்டு இடங்களும் மற்ற மறைத்தளங்களிலுமிருந்தும் தொலைவிலேயே உள்ளன. ஒவ்வொரு மறைத்தளத்திலும் இரு மறைப்பணியாளர் உள்ளனர். இம்மறைத்தளங்கள் முறையே திருகோணமலை, மட்டக்களப்பு ஆகியவையாகும். திருகோணமலையில் ஒரு இராணுவப் படையணியுள்ளது. இதிலுள்ள கணிசமானளவு போர்வீரர்கள் கத்தோலிக்கராயுள்ளனர். ஞாயிறு தோறும் இங்கு ஆங்கிலத்திலும், தமிழிலும் மறையுரைகள் இடம் பெறுகின்றன. திருகோணமலையில் அயர்லாந்தைச் சேர்ந்த போர்வீரர்கள் உட்பட 2000 கத்தோலிக்கர் உள்ளனர். மட்டக்களப்பிலும் 2000 கத்தோலிக்கர் உள்ளனர். திருத்தூது மாவட்டத்திலுள்ள மற்ற மறைத்தளங்களுடன் ஒப்பிடும் போது இங்குள்ள கத்தோலிக்கர் அமைதியானவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இவ்விரு இடங்களிலும் புரட்டஸ்தாந்து (பிரிந்த சகோதரர்களது) மறைபணியாளர்கள், மறையாசிரியர்களும் உள்ளனர். அவர்களது பாடசாலைகளுமுள்ளன. இவர்கள் மற்ற இடங்களைப் போல கத்தோலிக்கர் மத்தியில் தமது செல்வாக்கைச் செலுத்த முயல்வர்.

மாகாணத்தில் மேலும் இஸ்லாமியர்களும் மற்றும் இந்துக்களும் உள்ளனர். சற்று உட்புறமாகச் சென்றால் அங்கு வேடர் சமூகத்தவரைக் காணலாம். இவர்களுக்கு ஒரு நிரந்தர வதிவிடம் கிடையாது விந்தனை என்னும் பாரிய பிரதேசத்தில் இவர்கள் அடிக்கடி தமது இருப்பிடங்களை மாற்றி வாழ்வர். வேட்டையாடுவது இவர்களது சாதாரண தொழில். இதுவரையில் இந்த வேடர்கள் யாராவது கத்தோலிக்க சமயத்தில் சேர்ந்ததாகத் தகவல் இல்லை. இவர்கள் மத்தியில் சென்று நற்செய்தியை அறிவிப்பதோ அல்லது இவர்களோடு தொடர்புகளை ஏற்படுத்துவதோ இதுவரையில் கடினமாகவேயிருந்துள்ளது.

**வடமேல் மாகாணம்**

வடமேல் மாகாணத்தின் முக்கிய இடங்கள் - குருணாகல்- இது பிரதான நகராதலால் அரச அதிபரது வதிவிடம் இங்கு தான் உள்ளது.

**புத்தளம்** - உப அரச அதிபரது வதிவி டம் இங்குள்ளது

**சிலாபம்** - நீதிவானது வதிவிடம் இங்குள்ளது

**கல்பிட்டி** - இங்குதான் 1843ம் ஆண்டு புனரமைக்கப்பட்ட பிரபல்யமிக்க புனித அன்னாள் வணக்கத்தலம் உண்டு. வருடந்தோறும் பெரும் எண்ணிக்கையான யாத்திரிகர்கள் இவ்விடம் வருவார்கள்.

**குருணாகல்** - இந்த மறைத்தளத்தில் 716 கத்தோலிக்கர் உள்ளனர். இவர்களுள் இவ்விடத்தைச் சேர்ந்தவர்களும் இங்குள்ள கோப்பித்தோட்டங்களில் பணிபுரியவென இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட தமிழர்களும் அடங்குவர். இங்குள்ள கத்தோலிக்கரது எண்ணிக்கை வருடாவருடம் அதிகரித்து வருவதை அவதானிக்கலாம். இம் மறைத்தளத்தின் மறைப்பணியாளர் வருடத்தின் கூடுதலான நாட்கள் குருணாகல் நகரில் தான் தங்கியிருப்பார். இவர் சிலாப மறைத்தளத்திற்கு உதவி செய்யச் செல்வார். அத்துடன் 30-40 மைல் தொலைவிலுள்ள கல்கமுவவிற்கு வருடத்தில் 2.3 தடைவைகள் செல்வார். ஒல்லாந்தாருடைய துன்புறுத்தல் காரணமாக கத்தோலிக்கர் இங்கு வந்து குடியேறியிருந்தனர். அப்போது இருந்து இவர்கள் தலைமுறை தலைமுறையாகத் தமது நம்பிக்கை வாழ்வைப் பேணி வருகின்றனர்.

**கல்பிட்டி** - கல்பிட்டி மறைத்தளத்தில் பல கத்தோலிக்க சமூகங்கள் உள்ளன இவை

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

யனைத்தும் கணிசமான இடைவெளி தூரத்தில் அமைந்துள்ளன. இங்கு ஒரு ஐரோப்பிய குருவும் ஒரு சுதேச குருவுமாக இரு மறைப்பணியாளர் பணியாற்றுகின்றனர். இந்த மறைத்தளத்தில் மட்டுமல்ல முழு வடமேல் மாகாணத்திலும் புரட்டஸ்தாந்து சபையினர் சிலரேயுள்ளனர். இங்கு இஸ்லாமியர்கள் கணிசமான தொகையினர் உள்ளனர். இவர்களது எண்ணிக்கை வளர்ச்சி விகிதமும் மிகவும் அதிகரித்த வண்ணமுள்ளது இவர்கள் இங்கு வியாபாரத்தைத் தமது முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருக்க முனைப்புடன் ஈடுபடுவதால் இவர்கள் செல்வந்தர்களாகவும் அதற்குரிய திமிருடனும் உள்ளனர்.

**சிலாப மாவட்டம்** - சிலாப மாவட்டம் தெதுறு ஓயாவிலிருந்து மகா ஓயா வரை ஏறக்குறைய 25 மைல்களுக்கு விரிந்துள்ளது. இங்கு கத்தோலிக்கரது எண்ணிக்கை வருடத்துக்கு வருடம் அதிகரித்து வருகின்றது. இங்குள்ள தமிழரும் சிங்களவருமான 15,200 கத்தோலிக்கருக்குப் பணிபுரிய 3 அல்லது 4 மறைப்பணியாளர் உள்ளனர். கடந்த வருட முடிவில் (1860ம் ஆண்டு) ஆயர் செமேரியாவும் சில குருக்களும் இங்கு வருகை தந்து தங்கியிருந்து பலவிதமான ஆன்மீகப் பயிற்சிகளில் மக்களை ஈடுபடுத்தினர். இவற்றுள் பலர் பங்குபற்றிப்பயனடைந்தனர்.

இந்த மாவட்டத்தில் தற்போது நான்கு புதிய ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன. மக்களுடைய பங்களிப்பாலும் சிஸ்டர்சியன் சபைக்குருக்களாகிய ஒரூணா, கார்சியா அடிகளின் பணியார்வத்தாலுமே இவ்வாலயங்கள் கட்டப்பட்டன எனலாம். இவ்வாலயங்கள் இங்குள்ள மற்ற ஆலயங்களிலும் பார்க்க விசாலமானவையாகவும் ஆழகானவையாகவுமுள்ளன. இங்குள்ளவர்கள் தமது ஆலயங்களைக் கட்டுவதிலும் அவற்றைப் பரமரிப்பதிலும் விசேட கவனம் செலுத்தியுள்ளனர்.

1861ம் ஆண்டு வடக்குத்திருத்தூது மாவட்டத்தின் மறைத்தளங்கள், ஆலயங்கள், மறைபணியாளர்கள், கத்தோலிக்கர் சம்மந்தமான புள்ளிவிபரம்

(தொடரும்....)

# 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் போர்டோவின் திருக்குடும்ப சபைச் சகோதரிகள்

திருக்குடும்ப சபை 200 ஆம் ஆண்டை நோக்கிப் பயணிக்கும் இவ்வேளையில் அச்சபையின் வரலாற்றுத் தடங்கள் தொடராக வெளிவரவுள்ளது...

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

**பணி தொடர்ந்த பாதை.....**

- அனாதை இல்லங்கள், கல்விக் கூடங்கள், தொழிற்சாலைகள்
- பட்டணங்களிலும், கிராமங்களிலும் உள்ள நோயாளரைப் பராமரித்தல்
- ஏழைகள், ஒடுக்கப்பட்டோர், சேரிவாழ் மக்கள் பணிகள்
- வயோதிபர், குடும்ப அப்போஸ்தலத்துவம், பங்குப்பணி
- பிள்ளைகளைப் பராமரித்தல்
- மறைக்கல்வி ஊக்குவிப்பு

திருக்குடும்ப சபையின் நோக்காகவும், இலக்காகவும், பணியாகவும், அருங்கொடையாகவும் இருப்பது எதுவென்றால் இப்பிரபஞ்சம் அனைத்தும் இறைஅன்பின் இயக்காற்றலின் சக்தியிலிருந்து வாழ்வைப் பெற்றும் கொடுத்தும் வாழ்வதால் ஒருமைப்பாட்டின் நிறைவான இறைவனிலேயே தன் தொடக்கத்தையும், முடிவையும் கொண்டுள்ளது என்ற ஆழமான உண்மையில், ஒன்றோடொன்று கொண்டுள்ள ஆழமான உறவில், ஒன்றில் ஒன்று தங்கி வாழ்வதும், ஒன்றை ஒன்று நிறைவுபடுத்தி ஐக்கியத்தில், அன்பில் ஒருமைப்பாட்டின் நிறைவை அடைவதுமேயாகும். இதற்கு "இறைவன் மாத்திரமே, அவருக்கே மகிமை" என்ற ஆன்மீக மன நிலை ஊட்டமும் சக்தியும் அளிக்கின்றது. உன்னோடு உறவாட "இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே" (வி.ப 3:14) என்று மோயீசனுக்குத் தம் உயிருள்ள பிரசன்னத்தை இறைவன் வெளிப்படுத்தினார். "நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன்." (யோவா14:18) "இதோ உலக முடிவுவரை எந்நாளும் உங்களுடன் இருக்கின்றேன்" (மத் 28:20) என்று இயேசு தன் உடனிருப்பை வாக்குப் பண்ணினார். இந்த வாக்குறுதியின் ஆசீராக இயேசு தம் உயிருள்ள பிரசன்னத்தை நற்கருணையில் வெளிப்படுத்தி எம் சபையை உறுதிப்படுத்தினார். இது பற்றி அருட்தந்தை தெலோற் அடிகளாரின் சாட்சியம்... போர்டோ நகரிலுள்ள புனித யூலாலிப் பங்கில் தங்கியிருக்கவரும் பரீ (BARIE) என்னும் இடத்து முன்னாள் பங்குத்தந்தையுமாகிய நான், இறைவனின் சித்தத்திற்கு இணங்குவதன்றி வேறெந்த கருத்துமில்லாது லொறெற்றோ சகோதரிகளின் தாபனத்துக்கு அவர் கொடுத்த அருட்கொடையை வெளிப்படுத்தும்போது எனது தகுதியின்மையைப் பாராமல் இந்த அருங்குறிக்குச் சாட்சியாய் நான் இருந்தமையால் என் இறைவனாகிய ஆண்டவர் சமூகத்தில் அந்த வெளிப்படுத்துதலில் உள்ள சம்பவங்களுக்கு உண்மையான சாட்சியாக இருப்பேனென உறுதிப்படுத்துகின்றேன்.

1822ம் ஆண்டு மாசித் திங்கள் மூன்றாம் நாள் ஞாயிற்றுக்கிழமை (சப்தரிகை ஞாயிறு) பிதா நோஆய் அவர்கள் பாரீ (BARIE) பங்கின் முன்னாள் பங்குத் தந்தையாயிருந்து இளைப்பாறி போர்டோவில் புனித யூலாலி பங்கில் வாழ்ந்துவந்த அருட்திரு தெலோற் (DELORT) அடிகளை அங்குள்ள லொறெற்றோ சகோதரிகளின் (போர்டோவின் திருக்குடும்ப சகோதரிகள் என்ற பெயரில் இன்று பணிபுரிபவர்கள்) இல்லத்தில் பரிசுத்த நற்கருணை ஆசீர்வாதம் அருளும்படி கேட்டுக் கொண்டார்.

"இந்த வணக்கத்துக்குரிய குரவர் லொறெற்றோ சகோதரிகளின் சிற்றாலயத்துக்குப் பிற்பகல் 4.30 மணிக்குச் சென்றார். இல்லத்தில் அமைந்திருந்த ஆலயத்தில் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டது. அக்கணமே பரிசுத்த நற்கருணை சிறிது அசையத் தொடங்கியது. இயேசுக்கிறிஸ்துவின் மார்பளவு உருவம் தலையில் பிரகாசமான ஒளிவட்டத்தினால் சூழப்பட்டு தெளிவாகக் காட்சியளித்தது. அதில் காணப்பட்ட இயேசு உயிரோடு இருந்தார். அவருடைய கண்கள் கூச்சமடையுமளவு பிரகாசத்துடன் முப்பது வயது மதிக்கத்தக்க இளைஞனைப் போல்

**அருட்சகோதரி லூமினா போல்ராஜா**
**திருக்குடும்பக் கன்னியர் சபை**

இருந்தது. அழகிய கேசம் இருதோள்களிலும் சுருண்டு விழுந்து கிடந்தது. செந்நிறப்பட்டி அணிந்திருந்தார். இடது கை இதயத்தின்மேலும், வலதுகை ஆலயத்தில் உள்ளோரை நோக்கியவாறும் காணப்பெற்றன. இடைக்கிடை தலைகுனிந்து கதிர்ப்பாத்திரத்தை விட்டுவிலகி இருப்பது போல் தோன்றினார். அவருடைய தோள்களில் ஒளிவீசும் வைரக்கற்கள் தோன்றின. ஆலயத்தில் குழுமியிருந்தோர் கண்களிலிருந்து நன்றிப் பெருக்கால், ஆனந்தத்தால் கண்ணீர் வடிந்தது. சிலர் தங்களில் ஏற்பட்ட பக்தி உந்துதலின் உணர்ச்சிகளை அடக்கமுடியாமல் திகைத்தனர். இன்னும் சிலர் தியானத்தில் மூழ்கினர். இக்காட்சி தொடர்ந்து இருபது நிமிடங்கள் வரை நீடித்தது. இந்த அற்புதக்காட்சியால் நான் தாக்கப்பட்டு என் கண்களை நம்ப முடியாமல் இது ஒரு மாயைத் தோற்றமென எண்ணினேன். ஆனால் அந்தக் காட்சி தொடர்ந்து கொண்டேயிருந்தது. இந்த நிச்சயமற்ற நிகழ்ச்சியைப் பார்த்துப் பொறுத்துக்கொண்டிராமல் தூபக்கலசம் வைத்திருந்த சிறுவனை என்னிடம் சைகைகாட்டி அழைத்து ஏதாவது வழக்கத்துக்கு மாறாகக் காண்கின்றாயா? எனக் கேட்டேன். அவன் தான் அதை முன்பே கண்டுகொண்டதாயும் இன்னும் கண்டு கொண்டே இருப்பதாகவும் பதிலுரைத்தான். நான் இதை சிரேஷ்ட தாயாருக்கு அறிவிக்கும்படி கூறினேன். அவன் அதை கோயில் வேலைசெய்யும் கன்னியருக்குக் கூற அவள் அந்தக் காட்சியில் பரவசமடைந்து தனது உணர்ச்சிகளில் மூழ்கித் தனக்கறிவிக்கப்பட்ட செய்தியை முதலாய் எடுத்துக்கூற இயலாதவரானார். நானோ என்னை முற்றும் மறந்து நிலத்தில் பணிந்து இறைவனின் சந்நிதானத்தில் என்னைத் தாழ்த்தி என் கண்களை ஏறெடுத்தேன். நான் ஆனந்தம், நன்றி, கலக்கம் நிரம்பிய கண்ணீர் சொரிந்தேன்."

போர்டோ நகரப் பேராயரால் நியமனம் பெற்றஒருகுழுஎல்லாச்சாட்சியங்களையும் கவனமாகப் பதிந்து நுணுக்கமாகப் பரிசீலனை செய்தது. சுமார் ஒருவருட காலத்தின்பின் பேராயர் கொடுத்த அனுமதியில் ஒவ்வொருவருடமும் சப்திரிகை ஞாயிறன்று சிற்றாலயத்தில் நற்கருணை நாதரை எழுந்தருளச் செய்து நன்றி நவில வேண்டுமெனப் பணித்தார். இந்த நன்னாள் எல்லாத் திருக்குடும்ப இல்லங்களிலும் ஆண்டுதோறும் நினைவுகூரப் படுகின்றது.

இந்த அருங்குறி பற்றிய செய்தி எங்கும் பரவியது. அது திருக்குடும்ப சபைக்குச் சார்பாகவும், எதிராகவும் பல விமர்சனங்களைக் கிளப்பிவிட்டது. சிலர் அந்த நிகழ்ச்சியை மாயத்தோற்றம், கபடநாடகம் என வர்ணித்தனர். தந்தை நோஆய் இந்நிகழச்சியின்போது அவ்விடத்தில் இருக்கவில்லை. ஆனால் நம்பினார்.

(தொடரும்...)

# வடக்குக் கிழக்கில் தமிழர் தமது இருப்பை உறுதிசெய்ய பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை குறையவிடாமல் பாதுகாக்கவேண்டும்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 16வது அமர்விற்கான பாராளுமன்றத் தேர்தலுக்கான திகதி ஆவணி மாதம் 5 என தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ள நிலையில் தற்போது முகப்புத்தகம் மற்றும் சமூகவலைத்தளங்கள் என்பது தேர்தல் வேட்பாளர்களின் பிரசாரத் தளமாக மாறி இருப்பதை குறிப்பாக நீங்கள் அனைவரும் அவதானித்திருப்பீர்கள். முகநூலில் உள்ள வர்கள் தத்தமது ஆதரவாளர்களையும், கட்சிகளையும் ஆதரவளித்துபதிவுகளைஇட்டவண்ணமாகஉள்ளார்கள். இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவெனில் வடக்குக் கிழக்கு மாகாணத் தேர்தல் களம் எங்கு சூடு பிடித்துள்ளது என்பதே. இவ்விடயத்தை ஆராய்வோமா னால் அந்த மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களை விட வடக்குக் கிழக்குக்கு வெளியே வசிக்கும், வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாக்குரிமை அற்ற ஆனால் வடக்கு கிழக்கு மாகாணங்களை பூர்வீகமாகக் கொண்ட எம் சகோதரர்களாலேமுகப்புத்தகத்திலும், சமூகவலைத்தளங் களிலும் மிக சூடான விவாதங்களும், கருத்துக்களும் பகிரப்படுகின்றன என்பதை மனவருத்தத்துடன் பதிவிடு கின்றேன். இக்கட்டுரையை எழுதுவதன் நோக்கம் தனிப் பட்ட மனிதர்களின் கருத்துச் சுதந்திரத்தை தடுப்பதற்கான நோக்கத்தில் அல்ல. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களின் இருப்பை உறுதிப்படுத்த வேண்டு மெனில் பின்வரும் விடயங்கள் ஆழமாக நோக்கப்பட வேண்டும் என்பதேயாகும். இதற்காக நான் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தை உதாரணமாக எடுத்துள்ளேன். 1994ம் ஆண்டு வரை பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப் பாண தேர்தல் மாவட்டத்தில் (யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம் என்பது யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியது.) தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் 11 பாராளுமன்ற இருக்கைகளுக்கானதாக இருந்து 2001, 2004ம் ஆண்டு தேர்தல் பிரதிநிதித்துவம் 9 ஆகக் குறைக்கப்பட்டு கடந்த 2015ம் ஆண்டில் 7 ஆகக் குறைக்கப்பட்டது. 7 ஆசனங்களுக்காக -இன்று 330 வேட்பாளர்கள் பலகட்சிகளிலும், சுயேட்சைக்குழுக்க ளிலும் களமிறங்கியுள்ளனர். மிக முக்கியமாக தமிழ் தேசியச் சிந்தனை கொண்ட கட்சிகள் மூன்றாக உடைந் துள்ளதுடன் பெரும்பான்மை இனக் கட்சிகளும் களம் இறங்கியுள்ளன. நண்பர்களே வாக்குரிமை பிரயோகம் என்பது ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட உரிமை அதைத் தகுதியானவர்களுக்கு அளிக்க வேண்டியது உங்கள் கடமை. அதைப் பற்றி நான் கூற முயலவில்லை ஆனால் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் குறையுமானால், இவ் வாறு தமிழ் கட்சிகள் பல கட்சிகளாக உடைந்து பாராளு மன்றம் செல்லும் நிலமை ஏற்படின் ஒரே குரலாக தமிழ்மக்களின் உரிமைகளை வென்றெடுக்க கஸ்ரமான சூழ்நிலை உருவாகும். இம்முறைத் தேர்தலில் இந்நிலை உருவாகும் என்பதில் ஐயமில்லை. தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் பாராளுமன்றத்தில் குறைவடைந்து சென்றமைக்கான காரணங்கள், வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வசித்த தமிழ் மக்கள் யுத்தத்தின் காரண- மாகப் புலம்பெயர் நாடுகளுக்குச் சென்றமை, அகதிகளாக தமிழ்நாட்டில் தஞ்சமடைந்தமை, மேலும் குறிப்பாக 1995ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பாரிய இராணுவ நடவடிக் கையின் விளைவாக வடக்கு மாகாணத்தில் இருந்து வெளியேறி கொழும்பு போன்ற பிரதேசங்களில் குடியேறி யமை இதிலும் குறிப்பாக யுத்தத்தின்போதான இராணுவ கெடுபிடிகளால் எம் இளம் தலைமுறையினர் நாட்டை விட்டு வெளியேறியமை போன்றவற்றை பிரதானமான காரணங்களாகக் கூற முடியும். ஆனால் இன்று யுத்தமா னது நிறைவடைந்து 10 ஆண்டுகள் பூர்த்தியான நிலை யில் (தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டமும், தமிழ் மக்களின் அடிப்படை உரிமைசார் விடயங்கள் தொடர்ந்து நிலுவையில் இழுபட்டுள்ள இக்கட்டான ஓர் சூழ்நிலை காணப்படினும்) எமது பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த எம் அரசியல் தலைவர்கள் எடுத்திருக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறியுள்ளார்கள் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இன்று வடக்குக் கிழக்கு மாகாணங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் மற்றும், தொல்பொருள் விடயங்களை பாதுகாக் கும் ஜனாதிபதி செயலணி எனத் தமிழ் மக்களின் பூர் வீக இடங்களையும், சின்னங்களையும் அழிக்கக்கூடிய நடவடிக்கைகள்

ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்நிலையில் தமிழ் மக்கள் தமது பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் குறையவிடாது அதிகரிக்கவேண்டிய நிலமை காலத்தின் கட்டாயமாகும். வடக்குக் கிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்கள் கல்வி, நிமித் தமோ, தொழில் நிமித்தமோ, திருமண பந்தத்தினாலோ அல்லது வேறேதேனும் தவிர்க்கமுடியாத காரணங்களி னாலோ வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே (மிக முக்கியமாக கொழும்பு போன்ற பிரதேசங்களில்) தற்காலிகமாக வசிக்க வேண்டிய நிலை ஏற்படின் தயவு செய்து உங்கள் வாக்குரிமையை பிரயோகிக்கும் இடத் தினை உங்கள் சொந்தப் பிரதேசங்களிலேயே வைத் திருங்கள்.

வடக்கு, கிழக்கிற்கு வெளியே நிரந்தரமாக வசிக்க வேண்டிய தேவை ஏற்படின் உதாரணமாக சொந்தமாகவீடுகளுடன் இருப்பவர்களை வாக்குரிமையை வடக்கிழக்கில் வைத்திருக்குமாறு கோரமுடியாது. இங்கே இருக்கின்ற முக்கிய பிரச்சினை என்னவெனில் தற்காலிக மாக வசிக்க வேண்டிய நிலையில் இருப்பவர்கள் பாட- சாலைகளில் தங்கள் பிள்ளைகளை அனுமதிப்பதற்கு பெற்றோர்களின் வாக்காளர் அட்டைக்கு புள்ளிகள் வழங் கப்படுவதனாலும் கல்வி, தொழில் நிமித்தம் தற்காலிகமாக வசிக்கும் தமிழ் மக்கள் தங்கள் பிள்ளைகளினுடைய பாட- சாலை அனுமதிக்காக தங்களுடைய வாக்குப் பதிவுகளை தற்காலிகமாக வசிக்கும் இடங்களில் பதிவு செய்கிறார்கள். இவ்வாறாக வாக்காளர்கள் தமது வாக்காளர் பதிவு- களை தற்காலிக வதிவிடங்களில் பதிவு செய்வதால் வாக் காளர்களின் எண்ணிக்கை வடக்குக் கிழக்கில் கணிச மாகக் குறைவடைகின்றபோது அங்கே மக்களை பிரதி நிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அதே விகிதாரசாரத்திற்கேற்ப குறை- வடைசெய்கின்றது என்பதை நாம் மறந்துவிடுகின்றோம். இவ்வாறாக வடக்கு, கிழக்கிற்கு வெளியே தற்காலிகமாக வசிக்க வேண்டிய நிலையில் இருப்பவர்களில் பெரும் பாலோரின் தொழில் துறைகளைப் பார்த்தால் கணனி சார் தொழில்நுட்பத்துறையினரை உதாரணமாக கூற முடியும். இவர்களுக்கான தொழில் வாய்ப்பு வடக்குக் கிழக்கு மாகாணங்களில் காணப்படாமையும், கணனி சார் தொழில்நுட்பத்துறையில் இலாபமீட்டக்கூடிய தொழில் நிறுவனங்கள் இல்லாமையுமே முக்கிய காரணங் களாகும்.

இரண்டாவது முக்கியமான விடயம் என்னவெனில் யுத்தம் நிறைவடைந்து 10 ஆண்டுகளாகியும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் இளம் தலைமுறை யினர் மத்தியில் வெளிநாட்டு மோகம் இன்னும் அதிக ரித்து காணப்படுவதுடன், எவ்வாறாவது கனடா, அவுஸ் திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்றுவிட வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் கல்வி மற்றும் எதிர்கால வாழ்வை தொலைத்தவர்களாக உள்ளமை யையும் குறிப்பிடலாம். இதற்கு முக்கிய காரணம் புலம் பெயர் தேசங்களில் வாழும் நமது தமிழ் உறவுகள் தமது வாழ்க்கை முறையையும், தமது கஸ்ர துன்பங்க ளையும் வடக்குக் கிழக்கில் உள்ள இளம் தலைமுறை யினருக்கும் தமது உறவுகளுக்கும் சரியான முறையில் விளங்கப்படுத்தாமையையும் குறிப்பிடலாம். மேலும் புலம் பெயர் நாடுகளில் வசிப்பவர்கள் எமது இளம் தலை முறையினரை வெளிநாட்டுக்கு அழைப்பதற்கான வாக்குறு திகளை வழங்கி அதற்காக சட்டவிரோதமான முகவர் நிலையங்களுக்கு லட்சம் மற்றும் கோடிக்கணக்கில் பணத்தைக்கொட்டி இறைப்பதற்குத் தயாராக இருக்கும் நிலையுமே ஆகும். இதனால் எம் இளைய தலைமுறை யினர் வெளிநாடுகளுக்குச் சென்று குடியுரிமை பெறுவதும் நம்முடைய வாக்காளர்களின் எண்ணிக்கை இன்னொரு முறையில் வெகுவாக குறைவடையச் செய்வதற்கு கார ணமாக அமைகின்றது.

வடக்கு கிழக்கு பிரதேசங்கள் முன்னேற்றமடைய வேண்டுமானால் இளம்தலைமுறையினரின் கல்வி, பொரு ளாதாரம் என்பன வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உறுதித்தன்மை அடையவேண்டும். குளிர் பிரதேசங் களில் பல இன்னல்களுக்கு மத்தியில் கடின உழைப் பால் பெற்ற பணத்தை வெளிநாட்டு ஆட்கடத்தல் முகவர்க ளுக்கு இலட்சங்கள் மற்றும் கோடிக்கணக்கில் கொடுக்கத் தயாராக உள்ள எம் புலம்பெயர் உறவுகள், வடக்குக் கிழக்கில் அவற்றை முதலிடுவதற்கு இளம் தலை முறையினரை ஊக்குவிப்பார்களானால் பொருளாதார ரீதியிலும் எமது பிரதேசம் வளம்பெறுவதுடன், பலருக்கு தொழில் வாய்ப்பு வழங்கக்கூடிய நிலையும் காணப்படும். இதன் மூலம் எம்முடைய பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தின் எண்ணிக்கையையும் குறைய விடாது இன்னும் அதிகரிக்கச் செய்ய வாய்ப்புள்ளது. இதற்கு மேலாக, தற்காலிகமாக வடக்குக் கிழக்குக்கு வெளியே இருப்பவர்கள் தமது, அவசிய நோக்கத்துக்காக அல்லாமல் வாக்கு பதிவுகளை வெளிமாவட்டங்களில் செய்யாது, வடக்கு கிழக்கு மாகாணங்களிலே வாக்காளர் பதிவை மேற்கொள்ளுதல் எம்முடைய பாராளுமன்றப் பிரதிநிதித்துவ ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்த உதவும் என நம்புகிறேன். இங்கே விதிவிலக்காக அரசியல் கார ணங்களுக்காகக் கொழும்பில் நிரந்தரமாக இருந்தும், மக்கள் பிரதிநிதியாக வரவேண்டுமென்பதில் காதல் கொண்டு அண்மைக்காலமாகத் தமது வாக்குரிமையை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பிரயோகிக்கும் தமிழ் அரசியல்வாதிகள் தமது வாக்குரிமையை மட்டும் மாற்றாது தமது நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களின் வாக்குரிமையை வடக்கு கிழக்கு மாகாணங்களில் பதிய லாம். அத்துடன் இது தொடரான விழிப்புணர்வை வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஊடாக இலங்கை முழுவதும் செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமே. இது தொடர் பாக நாம் ஒவ்வொருவரும் கரிசனை கொள்ள வேண்டும். அதன் மூலமே வடக்குக் கிழக்கில் எமது இருப்பை உறுதிப்படுத்தமுடியும் என்ற நம்பிக்கையுடன்

**ம.யூட் டினேஷ்**
சட்டத்தரணி தலைவர்,
மறைமாவட்ட கத்தோலிக்க
சட்டத்தரணிகள் சங்கம்

## மௌனமான மறையுரை




அசிசி நகர் புனித பிரான்சிஸ், ஒரு நாள், ஓர் இளம் துறவியை அழைத்து, "வாருங்கள் நாம் ஊருக்குள் சென்று போதித்துவிட்டு வருவோம்" என்று கூறி, உடன் அழைத்துச் சென்றார். தனக்குக் கிடைத்த அந்த அரிய வாய்ப்பை எண்ணி, அந்த இளையவர் மிகவும் மகிழ்ந்தார்.

ஊருக்குள் நுழைந்ததும், அங்கிருந்த ஒரு மரத்தின் கூட்டிலிருந்து கீழே விழுந்து கிடந்த ஒரு குஞ்சுப் பறவையை மீண்டும் மரமேறி அந்தக் கூட்டில் வைத்துவிட்டு இறங்கினார் பிரான்சிஸ். வயலில் அறுவடை செய்துகொண்டிருந்த பணியாளர்களுடன் இறங்கி வேலை செய்தார். இதைக் கண்ட அந்த இளம் துறவியும் குனிந்து வேலைகள் செய்தார். ஊருக்குள் சென்றதும், அங்கு ஒரு கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்த வயதான பெண்மணிக்கு பிரான்சிஸ் தண்ணீர் இறைக்க உதவினார். அவருடன் அந்தத் தண்ணீர் பாத்திரங்களை அவர் வீடுவரை சுமந்து சென்றார்.


இவ்விதம், பிரான்சிஸ்ும், உடன் சென்ற இளைய வரும், நாள் முழுவதும், அந்த ஊரில் பலருக்கும் பணிவிடைகள் செய்தனர். ஒவ்வொரு முறையும், பிரான்சிஸ், ஓர் இடத்தில் நிற்கும்போது, அந்த இடத்தில் அவர் போதிக்கப்போகிறார் என்று இளைய- வர் எண்ணினார். ஆனால், ஒரு வார்த்தையும் சொல்லாமல், பிரான்சிஸ் பல உதவிகளைச் செய்தார். அந்த நாள் இறுதியில், பிரான்சிஸ் கோவிலுக்குச் சென்றார். அவர் கட்டாயம் அந்த நேரத்தில் போதிப்பார் என்று இளையவர் எதிர்பார்த்ததற்கு மாறாக, பிரான்சிஸ், கோவிலில் அமைதியாக செபித்துவிட்டுக் கிளம்பினார்.

இருவரும் மீண்டும் ஊரைவிட்டு வெளியே வந்து, தங்கள் துறவகத்தை நோக்கிச் சென்றபோது, இளையவர் தன் உள்ளத்தில் நிறைந்திருந்த ஏமாற்றத்தை வெளியிட்டார். "போதிப்பதற்காகத்தானே ஊருக்குள் சென்றோம். இப்போது போதிக்காமலேயே திரும்புகிறோமே!" என்று தன் உள்ளக் குமுற லைக் கூறினார். பிரான்சிஸ், இளையவரிடம், "நமது செயல் கள், வார்த்தைகளைவிட வலிமையானவை. நாம் தேவையான அளவு இன்று போதித்துவிட்டோம். தேவைப்படும்போது மட்டும் வார்த்தைகளை பயன் படுத்தவேண்டும்" என்று கூறினார்.

பல நேரங்களில், நாம் பகிர்ந்துகொள்ளும் நற்செய்தி, வாய்ச்சொல்லாக இருப்பதைவிட, வாழ்வாக அமைவது மிகச் சிறந்தது.

## காவலன் கலசம்

# கொரோனா! ஏன்? எப்படி? எதனால்?



இன்று முழு அகிலமும் கொரோனா என்னும் கொடிய வைரஸ் பரம்பலால் சின்னாபின்னப்படுத்தப்பட்டுள்ளது. உலகப் பந்தை மிக வலிய கரம் ஒன்று தூக்கிக் குலுக்கியது போன்ற நிலைமை. அணு ஆயுதங்கள் தாங்கிய வல்லரசுகளாயினும் சரி வறிய நாடுகளாயினும் சரி தம் மக்கள் கொத்துக் கொத்தாகச் சாயும் போது செய்வது அறியாது கை பிசைந்து செயலற்று நிற்கின்றன. இந்நிலைமைக்குக் காரணம் சீனா என்பர். அதற்கு ஆதாரமும் உண்டு என்பர் பலர். ஆனால், எம்மால் ஏற்க முடியாத ஆனால் மறுக்க முடியாத பேருண்மை எது வெனில் இந்நிலைக்குக் காரணம் நாம்; நாமே தான்.

இது தொடர்பாக இறைவார்த்தையைப் புரட்டினால் இந்நிலை ஒரு நாள் உருவாகும் என்பதை இறைவாக்கினர் பலர் முன்கூட்டியே எச்சரித்துள்ளனர். "உங்கள் அறைக்குள் நுழைந்து கதவைத் தாழிட்டுக் கொள்ளுங்கள். தமக்கு எதிராக மண்ணுலகில் வாழ்வோர் செய்த தீச் செயலுக்கு தண்டனை வழங்க ஆண்டவர் தம் திருத்தலத்தில் இருந்து புறப்படுகிறார் என்கிறார் இசையாஸ் இறைவாக்கினர். (இசை 26:20)

அவர்கள் கொடும் நோயால் மடிவார்கள். சிறியோரும், பெரியோரும் இறந்து போவார்கள். மகிழ்ச்சி ஒலியும், உவகைக் குரலும், திருமண ஆரவாரங்களும் எழாது இருக்கச் செய்வேன். இவை உங்கள் வாழ்நாளில் உங்கள் கண்முன்னே நிகழும் என்கிறார் மற்றோர் இறைவாக்கினர். (எரே 16:4-9)

எனவே இத்தகைய தீங்கானது இறைவன் அனுமதிக்காது உலகினுள் நுழைய முடியாது. மகத்துவம் மிக்க மனித உடலங்கள் முகம் தெரியாதவர்களால் பாரிய குழிகளுள் தூக்கி வீசப்படுகின்றன. இதற்கு யார் காரணம்? ஆண்டவரே

**எம்.என்.நவரட்ணராஜா**

கூறுகிறார் "நீங்கள் ஒவ்வொருவரும் தம் தீய இதயத்தின் பிடிவாதத்தின் படி நடக்கிறீர்கள். என் வார்த்தைக்குச் செவி கொடுப்பதேயில்லை என்கிறார்.

இத்தகைய தீமையிலும் சில நன்மைகளும் உண்டு எனலாம். குடும்பங்களை விட்டுத் தம் தொழிலே கதியென வெளியில் வாழ்ந்தவர்கள், குடும்பங்களுடன் பொழுதைக் கழிப்பதையும், ஆலய முற்றங்களை மதிக்காதவர்கள் கூட அச்சம் காரணமாக பூட்டிய ஆலயக் கதவுகளுக்கு வெளியே நின்று கையெடுப்பதையும் பார்க்கின்றோம். பலர் மாலை வேளைகளில் குடும்பமாகச் செபிக்கின்றார்கள். அடிப்படை நோக்கங்கள் அருவருப்பானதாயினும் பகிர்தல் என்பது முன்னுரிமை பெறுகின்றது.

எம் ஆன்மீக வாழ்வில் தீமைகள் நிறைய உண்டு. ஆலயத்தில் மட்டும் ஆன்மீகத்தை வளர்த்துப் பழக்கப்பட்டவர்கள். செய்வதறியாது திகைத்து நிற்கிறார்கள். திரு விருந்தினை நாளாந்தம் பெற்றவர்கள். இறைவார்த்தைகளை அதன் விளக்கத்துடன் குருவிடம் பெற்ற மக்கள். இறைவார்த்தைப் பஞ்சத்தால் தடுமாறிப் போயுள்ளனர்.

ஆனால் இந்நிலைக்குக் காரணமானவர்கள் நாம் தான் என்பதை ஏற்று, மனம் மாறாத வரையில் எமக்கு மீட்சி என்பது மிகத் தொலைவில் தான் என்பதே உண்மை!

## கொரோனாவும் தாதியமும்



வைரஸ் தீக்காட்டில் வதங்கும்
மருத்துவச் செடிகளே தாதியரே!
நாம் தூங்க விழித்திருக்கும்
நம் காவல் தெய்வங்களே!

நிம்மதியாய் படுத்து நீண்ட நாட்கள்
குழந்தையை அணைக்க
- விரல் துடிக்கும்
உங்களுக்கு உங்களில்
- சந்தேகம் வரும்
இப்படி எத்தனை வலி சுமந்தீர்

பாதுகாப்பு ஆடைக்குள் உப்பு நதி
வழிந்து ஒழுகி ஈரம் பிசுபிசுக்கும்
சாப்பாடு எடுத்துவாயில் கடிக்கையிலே
சாவு மணம்தானே
- உணவில் மொய்க்கும்

மரணக் கழுகுகள் கலைத்துவிட்டு
மனிதக் குஞ்சுகள் காப்பவரே!
ஓசோன் படைகள் நீங்கள் தான்
ஓட்டை விழுந்திடக்கூடாது

பிணமாய் நீங்கள் விழுந்தாலும்
புதைக்க விடாமல் கல் எறிவோம்
நன்றிகெட்ட எங்களுக்காய்
நெருப்பில் கருகும் மெழுகாவீர்

வைரஸ் சுடுகாட்டில் நின்றுகொண்டு
வாழ்வை வரம் கொடுக்கும்
- தெய்வங்களே
வரலாறு உம்பெயரைப் பச்சை குத்தும்
வைரசே வியந்தொருநாள் கைதட்டும்

அருட்பணி
சி.அஜந்தன்

# யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க திருமறைக் கல்வித் தேர்வு -2019

## முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலை மாணவ மாணவியரின் விபரங்கள்

| தரம் | மாணவர் பெயர் | பாடசாலையின் பெயர் | நிலை |
|---|---|---|---|
| 03 | நவீனராசன் மதுஷிகன் | யா/ புனித பத்திரிசியார் கல்லூரி | 1ம் இடம் |
| | ஹெ. ஹெவின்சினி | யா/ சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை | |
| | அன்றியா வர்ஷனா பசில் சுரேந்திரன் | யா/ புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயம் | |
| | வ. ஹிலான்ஸ்ரிகா | யா/ இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயம் | |
| 04 | சி. சில்வெஸ்ரர் | யா/ மத்திய கல்லூரி | 1ம் இடம் |
| | ஜெ. லிமேஷிகா | யா/ நல்லூர் சென். பெனடிற் றோ.க. வித்தியாலயம் | |
| | தோமஸ் டிக்ஷன் | கிளி/ கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம் | |
| | யூட்வில்பிரட் அக்ஷயன் | கிளி/ வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம் | |
| 05 | ந. திவ்யா | யா/ நல்லூர் சென். பெனடிற் றோ.க. வித்தியாலயம் | 1ம் இடம் |
| | ம. டிபோன்சன் | யா/ மண்டைதீவு றோ.க. வித்தியாலயம் | 2ம் இடம் |
| | றொ. றொமில்டா | யா/ மண்டைதீவு றோ.க. வித்தியாலயம் | |
| 06 | ஜெரூபன் ஜெனோசினி | யா/ கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலை | 1ம் இடம் |
| | சுரேஸ் சிலம்பரசன் | யா/ புனித பத்திரிசியார் கல்லூரி | |
| | அஸ்லி அன்றூ | யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை | |
| 07 | டீன் ஜவின் டிதுஷன் | யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி | 1ம் இடம் |
| | டொ. பெனற் டிலக்சியா | யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி | 2ம் இடம் |
| | மேரி கவோனா சில்வெஸ்ரர் லக்ஸ்ரன் | யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை | 3ம் இடம் |
| 08 | தேவதாஸ் கிசானி | யா/ ஊர். புனித மரியாள் றோ.க. மகளிர் வித்தியாலயம் | 1ம் இடம் |
| | அ. சுதர்சனா | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | |
| | ஆறுமுகம் சானுஜன் | யா/ ஊர். புனித அந்தோனியார் கல்லூரி | 3ம் இடம் |
| 09 | ச. விதுஷா | கிளி/ திருவையாறு மகாவித்தியாலயம் | 1ம் இடம் |
| | நில்ரா நிமிலன் விமலதாஸ் | யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை | 2ம் இடம் |
| | ம. எழில்மைந்தன் | கிளி/ இராமநாதபுரம் மகாவித்தியாலயம் | |
| 10 | வசீகரன் ஜீவிதன் | யா/ புனித பத்திரிசியார் கல்லூரி | 1ம் இடம் |
| | டினோசா கனிஸ்லாஸ் | யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை | |
| | ஜெசில்டா சூசைதாசன் | யா/ சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை | |
| | அ. றொசானி | யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை | |
| 11 | கென்சியல் லோறன்ஸ் சபோடின் | யா/ புனித பத்திரிசியார் கல்லூரி | 1ம் இடம் |
| | பிரான்சிஸ் சேவியர் பொபிதரன் | யா/ புனித பத்திரிசியார் கல்லூரி | |
| | லக்சனா லக்சன் | யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை | |

28.11.2019இல் யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தால் பாடசாலைகளில் நடாத்தப்பெற்ற கத்தோலிக்க திருமறைக் கல்வித் தேர்விற்கு ஒத்துழைப்பு வழங்கிய பாடசாலை அதிபர், ஆசிரியாகளுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இத்தேர்வில் வகுப்பு ரீதியாக முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களை யாழ். மறைமாவட்டத்தின் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இயக்குனர்,
X.W. ஜேம்ஸ்
யாழ். மறைக்கல்வி நிலையம்.

# மிக இள வயதில் தனிமையில் கொடூரமான வேதனையோடு அவள் மரணமடைந்தாள்



கொரோனா வைரஸ் தொடர்பான தனிமைப்படுத்த லால் நீங்கள் சலிப்படைந்து உள்ளீர்களா? எனினும் இதில் நாம் குறிப்பிடுபவர் "இஸ்பானியக் காய்ச்சல்" (Spanish Flu pandemic) எனப்படும் வியாதியால் பாதிக்கப்பட்ட ஒருவராவார். கசநோயால் பீடிக்கப்பட்டு, வைத்தியசாலை யில் குடும்ப உறவினரின் தொடர்பற்று தனிமையில் இருந்தவர் தனது வலிகள், வேதனைகள், துன்பங்களை மனித குலத்தின் பாவங்களுக்காகவும், பாவிகளின் மன மாற்றத்திற்காகவும் இறைவனுக்கு ஒப்புக்கொடுத்தவராவார். 10 வயது மாத்திரமே நிரம்பிய அந்தச் சிறுமி தனது உடல் பலவித வேதனையான நோய்களோடு பாதிக்கப்பட்ட நிலையிலும் எதுவித முறைப்பாடுகளும் செய்யாது மகத்துவமான அர்ப்பண வாழ்வு வாழ்ந்தவர்.

**பாத்திமா தேவ அன்னை :**

"நீங்கள் உங்களை இறைவனுக்கு அர்ப்பணித்து ஒப்புக்கொடுக்க விரும்புகிறீர்களா? அதாவது, அவர் உங்க ளுக்கு அனுப்ப விரும்பும், துன்பங்களையும் தாங்கிக் கொள்ள நீங்கள் உங்களைப் புண்படுத்திய பாவங்களுக்கு ஈடுசெய்யும் செயலாகவும், பாவிகளின் மன மாற்றத்தைக் கேட்கவும், நீங்கள் கடவுளுக்கு உங்களை ஒப்புக் கொடுக்க விரும்புகிறீர்களா?"

புனித ஜசிந்தா, புனித பிரான்சிஸ்கோ மற்றும் சகோதரி லூசியா

"ஆம் நாங்கள் விரும்புகிறோம்"

பாத்திமாவின் புனித ஜசிந்தா மார்ட்டோ (மார்ச் 11, 1910 - பெப்ரவரி 20, 1920)"அயலான்ட்ஸ் ஓவ்ன்" ("Irelands Own") எனப்படும் சஞ்சிகையில் ஜிம் டன்னிங் (Jim Dunning) எனப்படுபவரால் இக்கட்டுரை முதலில் பிரசுரம் செய்யப்பட்டிருந்தது.

பிரான்சிஸ்கோவின் இளைய சகோதரியும், லூ சி யாவின் "கசின்" உறவு முறையானவருமான ஜசிந்தா 11 மார்ச், 1910ல் பிறந்துள்ளார். அவளது சகோதரரைப் போலல்லாமல், ஆறு தரிசனங்களின் போதும் அவர் எங்கள் அன்னையைப் பார்த்தார், ஆனால் லூசியாவி டம் என்ன சொல்லப்படுகிறது என்பதனை அவள் எப் போதும் கேட்கவில்லை. ஒரு உணர்வுத்திறன் வாய்ந்த குழந்தையான அவள் தனது ஐந்தாவது வயதில் ஆண்ட வரின் பாடுகளை வாசிப்பதனைக் கேட்டபோது, "எங்கள் இறைவன் இனி துன்பப்படக்கூடாது" என்று தீர்மானித் தாள். தொடக்கத்தில் அவர் லூசியாவை ஒரு வேறுபட்ட கணிப்புக்கு உட்படுத்தி, அவளை ஒரு "கசின்" உறவு முறையை விட மேலான ஒரு மூத்த சகோதரி என்று கருதினார். டி மார்ட்டோ என்று பிரபலமாக அறியப்பட்ட அவரது தந்தை, ஜசிந்தாவைத் தனது குழந்தைகளில் மிக இனிமையானவர் என்று வர்ணித்தார். அவள் சந்திரனை 'எங்கள் அன்னையின் விளக்கு' என்று அழைத்தாள்.

தனது தவறான போக்குகளை அவள் கொண்டிருந்தா லும், அவற்றில் ஒன்று மௌனமாயிருத்தல் எனப்படும். மே, 1917 இல் நடந்த முதல் தரிசனத்தின் போது, ஜசிந்தா வெட்கமடைந்து பின் தங்கியிருந்தாலும், அவர்கள் தங்களது மதிய உணவுக்கெனக் கொண்டுவந்த ரொட்டி மற்றும் பாலாடைக்கட்டி ஆகியவற்றில் சிலவற்றை அன்னைக்கு வழங்கலாமா? என்றுகேட்டார். அதன்பின் னர், தாங்கள் கண்டதனை எவரிடமும் தெரிவிக்கக் கூடாதென ஜசிந்தா வலியுறுத்தினார்.

ஜசிந்தா ஒரு வார்த்தை கூடச் சொல்மாட்டேன் என்று சபதம் செய்தாலும் பின்னர், அவரது பெற்றோர் சந்தையால் திரும்பி வந்தபோது, விரைவாகக் ஹகூச்ச லிட்டு "அம்மா நான் இன்று எங்கள் அன்னையைப் பார்த்தேன்" என்றதோடு, மதிய உணவு வேளையில் தனது கதையைக் குடும்பத்தில் அனைவரிடமும் சொல்லி யிருந்தாள். அவளது தாயார் பரிகசித்துச் சிரித்தாலும் தகப்பனார் நம்பியதோடு, பிரான்சிஸ்கோ (தரிசனத்தில்) எதனையும் காணாமலும், கேட்காமலும் இருந்தாலும், அவளது கதைக்கு உதவி புரிந்தார்.

இவ்விபரம் வேகமாகப் பரவியதுடன், லூசியா வின் தாயார் மரியா ரோசா, தனது மகளைக் கடுமை யாகக் கேள்விகள் கேட்டு விசாரனை செய்தார். பங்குத் தந்தை சிறுவர்களது கதையை நம்ப மறுத்ததால், பொய் சொல்லுவதாக அப்பாவி லூசியா கண்டனத்திற்கு ஆளானாள். தனது வாக்குறுதிக்கமைய மௌனம் பேணப்படவில்லை என ஜசிந்தா மீது குற்றம் சுமத்தப் பட்டது. பின்னர் "தேவ அன்னை எதற்காக ஜசிந்தாவோடு கதைக்கவில்லை" எனக்கேட்டபோது, லூசியா பதிலாக: "ஏனெனில் ஜசிந்தாவின் நாக்குக் கட்டப்பட்டிருந்தது, எமது அன்னை அவளுடன் கதைத்திருப்பார்கள், தரிசன வேளையில் ஜசிந்தா புன்னகைத்ததனைத் தவிர கதைப்பதற்கு எதுவித முயற்சியும் எடுக்கவில்லை" எனத் தெரிவித்தாள்.

சிறுவர்களுடனான நேர்காணலின் பின்னர் "பசாசின் தந்திரத்துக்குள் சிறுவர்கள் அகப்பட்டிருக்கலாம்" எனப் பங்குத் தந்தை பரிந்துரைத்தார். லூசியா பயந்த தோடு, "பசாசானது அசிங்கமானதோடு, நிலத்துக்கு அடியில் நரகத்தில் வாழ்வது" என ஜசிந்தா உறுதியாகத் தெரிவித்தார். பல்வேறு அழுத்தங்களாலும் கவலைப்பட்ட லூசியா, தான் பொய் சொன்னதாக அனைவரும் நினைத்தபோது, அவ்வாறான (லூசியாவின்) நினைப்பு பொய்யாக இருக்கலாம் என்று ஜசிந்தாவும், பிரான்சிஸ் கோவும் கோபமாக அவளிடம் சொன்னார்கள். ஆகஸ்ட் 13ம் திகதியில் நிர்வாக உத்தியோகத்தர் சன்டோஸ் ("Santos'). அடுத்த தரிசனத்துக்காக கோவா ட ஜரியா வுக்கு (Cova da Iria) சிறுவர்கள் செல்வதனைத் தடுப்பதற் காக அவர்களைக் கடத்திச் சென்றதோடு கொதிக்கும் எண்ணெய்க் கொப்பறைக்குள் சிறுவர்களைத் தள்ளு வதாகவும் பயப்படுத்தினார். இறந்து விடுவேனோ? எனப் பயந்து மிகுந்த வேதனைப்பட்டு ஜசிந்தா அழவில்லை, மாறாக, தனது தாயரை மீண்டும் பார்க்க முடியாது போய்விடுமே என நினைத்து அழுதாள். (தொடரும்....)

# வழிபாடு வாழ்வாகுமா!!

(கடந்த இதழின் தொடர்ச்சி....)

**திருப்பலிக்கான திரு உடை**

அன்னை மரியாவை நினைவு கூர்ந்து ஒப்புக்கொடுக்கும் திருப்பலிகளில் நீல நிற உடைகள் அணியப்படுகின்றன. மேலும் அவை சில இடங்களில் மட்டுமே அனு மதிக்கப்படுகின்றன. ஆடைகள் அதிகம் அலங்காரப்படுத்தப்பட்டதாகஇருப்பதுஅந்த வழிபாட்டின் அர்த்தத்தை மாற்றிய மைக்கின்றது.

கலாசார மயமாக்கப்பட்டதாகவும் இது பல வேளைகளிலே தோன்றுகின்றது. எல்லா இடங்களிலும் ஒரே வகையான வழிபாட்டு ஆடைகள் இருக்கவேண்டிய தேவையில்லை ஆனால், அதனது நிறங் கள் தேவைக்கேற்றபடி எம்மால் மாற்றமுடி யாது. திருச்சபைஎங்களுக்குகொடுத்துள்ள இந்த அழகான வழிபாட்டு ஆடைகளை அர்த்தத்துடன் அணிந்து கிறிஸ்துவின் பாடுகளையும், மரணத்தையும் அவரது உயிர்ப்பையும் தியானித்து அதிலே பங் கேற்பது எமது ஆழமான விசுவாசத்தைத் தெளிவாகக் காட்டுகின்றது.


**இரண்டாம் வத்திக்கான் சங்கத்தினால் ஏற்பட்ட மாற்றங்கள்**

யூத மதத்தைத் தழுவியதே கிறிஸ்தவ சம யம். அதனதுவழிபாட்டு முறைகள், அதிலே பயன்படுத்தப்படும் அடையாளங்களும், வழிபாட்டுக் குறியீடுகளும் யூத வழிபாட்டு செயற்பாடுகளையும் செயன்முறைகளை யும் ஒத்ததாகக் காணப்படுகின்றன. வழி பாட்டு இறையியல் என்பது ஒரு ஒழுங்க மைக்கப்பட்ட கற்றல் செயற்பாடாக அமை யப்பெற்றதற்குஇரண்டாம்வத்திக்கான்சங் கம் ஒரு எழுத்துக்கள் அடங்கிய (Rubrics) வழிபாட்டின் ஒழுங்கு முறைகளுக்கு அடிமைப்பட்டதாகவே காணப்பட்டது.

வழிபாட்டினுடைய இறையியலைக் கற்பிப்பதற்குப் பதிலாக அதை எவ்வாறு கொண்டாட வேண்டும் என்று தான் அறி வுறுத்தப்பட்டது. திரெந்து சங்கம் (1545-63) ஒரு அருட்சாதனம் செல்லுபடியா குமா இல்லையா என்பதை பற்றி சிந்திப் பதிலேயே அதிகம் கவனம் செலுத்தியது. மிக சரியானதும், ஒழுங்கானதும், சட்ட பூர்வாகவும் ஒரு திருப்பலி ஒப்புக்கொடுக் கப்பட்டது என்பதிலே தான் முழுக் கவன மும் இருந்ததே தவிர அந்தத் திருப் பலியை உணர்ந்து, செபித்து, அதனது மறைஉண்மைகளை ஆழ அறிந்து ஒப் புக்கொடுக்கப்பட்டது என்பதிலே அக் கறை இல்லாமல் போனது. உண்மை யில் இதுவே பிரிவினை சபைகள் எமது வழிபாட்டை பகிரங்கமான முறையில் விமர்சிக்க ஒரு காரணமாக அமைந் தது எனலாம்.

இந்த நிலை உண்மையாகவே 20ம் நூற்றாண்டிலே ஒரு பாரிய மாற் றத்தைஎதிர்கொண்டது. எழுத்தாளர்களும், சிந்தனையாளர்களும், இறையியளாளர் களும் திருஅவையின் கிறிஸ்தவ எழுத் தாளர்களின் சிந்தனையை மீண்டும் திருப்பி பார்க்க வைத்தது. இதனால் வழிபாட்டில் ஒரு புதிய சிந்தனையுடனான இறையியல் பிறந்தது. மாறுபட்ட நுணுக் கங்களோடு அதிலே ஒரு புதுப்பித்தல் ஏற் பட்டது. கத்தோலிக்க வழிபாட்டிலே ஏற்பட்ட மாற்றங்கள் பல திருச்சபை தலை மைப்பீடங்களிலே இருக்கின்றவர்களின் பழைமைவாதத்தைக் கேள்விக்குறியாக்கி யது. இலத்தின் மொழியை விடுத்து தங் களது சொந்த மொழியிலேயே திருப் பலியை ஒப்புக்கொடுப்பது பல கத்தோலிக்க மத குருக்களின் விருப்பமின்மையை சம் பாதித்தது. இவ்வாறு சீர்திருத்தவாதிகளின் (Protestant) வழிபாட்டு முறையை பின் பற்றுகின்றோம் என்றும் குற்றம் சாட்டப் பட்டது. ஆனால் இவர்களுடைய இந்த முயற்சியினால் எமது கத்தோலிக்க திருச் சபையிலே பல மாற்றங்களை நாம் காண்கின்றோம். காத்தோலிக்கம் என் றால் இலத்தின் மொழியே இல்லையெனில் அது கத்தோலிக்க திருச்சபையின் கோட் பாடுகளுக்கு எதிராக பயணிப்பது போலாகி விடும் என்றும் பலர் அஞ்சினர்.

இவற்றிற்கெல்லாம் ஒரு வழியை காண்பித்து எல்லோரையும் உண்மை யான சுதந்திரமான காற்றை சுவாசிக்க வைத்தது இரண்டாம் வத்திக்கான் சங் கம். பல தடைகளை தகர்த்தெறிந்தது. மக்களை தங்களின் உணர்வுகளோடு இறைவனை காணவும், பேசவும், தொட் டுப்பார்க்கவும் வழிபாட்டை உயிர்துடிப் புள்ளதாய் மாற்றியது இந்த சங்கம். இதனால்வழிபாடுஒருஅழகானவடிவமாக தோன்ற ஆரம்பித்தது. மக்கள் தெரிந்து பங்குபற்றவும், அறிந்து அறிவிக்கவும் முடியுமானதாய் அமைந்தது.




அருட்பணி ச.ஜே.சுரேந்திரராஜா அ.ம.தி
(sjsurenomi@gmail.com)

## காவலன் கலசம்



# கிறுக்கல்கள்

றேச்சல் மரியதாஸ்

'பிறகு ஜெனி. உமக்கெப்ப விசேசம்?' மேரி அன்ரி வழக்கம் போல தொடங்கினார். திருமண வயது என அவர் கருதும் வயதையொட்டிய பெண்களைக் கண்டால் அவரையும் அறியாமல் அந்த கேள்வியைக் கொட்டி விடுவார். அவர் போன்ற பல மேரி அன்ரிகள் அவளைக் காணும் போதெல்லாம் அந்தக் கேள்வியைக் கேட்கத் தொடங்கியிருந்தார்கள்.

'பாக்கினம் அன்ரி' அவளும் வழக்கம் போல வரண்ட புன்னகையுடன் பதில் சொல்லி விட்டு மெதுவாக அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

'கல்யாணம் முடிக்காட்டில் சீவிக்க விடாதுகள் போல' என்று தனக்குள் குமைந்தவாறு பல்பொருள் அங்காடியை விட்டு வெளியேறினாள்.

திருமணம் அவளைத் துரத்திக் கொண்டிருந்தது. அவள் அறை வாசலில் அவளைப் பிடித்து விழுங்கிவிடக் காத்திருக் கும் ஒரு கொடிய அரக்கனைப் போல.

'உன்னோட படிச்சதுகள் எல்லாம் பிள்ள குட்டியெண்டு செட்டில் ஆகிட்டுதுகள். உனக்குப் பிறகும் ஒருத்தி இருக்கிறாள். அத மறக்காத. இப்பிடியே நீ திரிஞ்சால் அவள என்ன செய்யிற நான்?' அம்மா தினமும் சுப்ரபாதம் போல பொரிந்து தள்ளுவார். அவரை எதிர்த்துப் பேசுவதிலோ, சண்டை போடுவதிலோ பயனில்லை. அவரின் கவலை அவருக்கு. அவள் மனதில் புதைந்து போயிருந்த வடுக்களை அவர் அறிய வாய்ப்பில்லை. அவரிடம் தன் நிலையை சொல்லிப் புரிய வைக்குமளவுக்கு அவளிடம் பொறுமையில்லை. அதைப் புரிந்து கொள்ளும் அளவிற்கு அவள் தாயாருக்கும் பரந்த பார்வை இருக்கவில்லை. அமைதி காப்பதே சாலச்சிறந்தது.

மேரி அன்ரி மேலிருந்த குமைச்சலில் எதிரில் வந்தவரைக் கவனிக்காமல் மோதி விட்டாள்.

'ஜெனி கவனம், இப்பயெல்லாம் பகல்லயே கனவா?' என்றவாறு கீழே விழுந்த அவளின் கைப்பையை எடுத்து நீட்டினான் அவன். அப்போதுதான் தான் முட்டித்தள்ளிய மனிதர் யாரென்று பார்த்தாள். 'அட நீரா? நான் எதோ கிழவன முட்டி கொல கேஸ்ல சிக்கிட்டன் எண்டு பயந்துபோனன்' என்று சிரித்துக் கொண்டே கைப்பையை வாங்கிக் கொண்டாள். 'ஜெனி சேச்சி, நக்கலுக்குக் குறச்சலில்ல' என்றவாறு அவனும் அவளுடன் சேர்ந்து நடக்கத் தொடங்கினான். 'இது எந்தா! எப்பல இருந்து மலையாளி!' அவன் தோள்களை விளையாட்டாகத் தட்டியபடி அவளும் நடக்கத் தொடங்கினாள். 'நேற்று ஒரு மலையாள படம் பாத்தன், அதில இருந்து... அத விடும். உம்மோட கதைக்கத்தான் இருந்தன். நீரே வந்து முட்டிப் போட்டீர்' அவன் தோளைத் தடவியவாறு சொன்னான். அவன் கண்களில் தவழ்ந்த குறும்பு கொஞ்சம் குறைந்திருந்தது. 'என்னோட என்ன கத?' என்றது போல பார்த்தாள் ஜெனி. இப்போது அவள் கண்களிலும் சற்றுத் தீவிரம் படர்ந்திருந்தது. 'அம்மா கதச்சவா ஜெனி...' அவன் சற்று இழுத்தான். 'நீருமா' என்றது போல பார்த்தாள் அவள். சற்றுமுன் மேரி அன்ரி முன் தோன்றிய குமைச்சல் தொண்டை வரை வந்து அடைத்துக் கொண்டது.

'எனக்கு விளங்குது ஜெனி.. நானும் உம்ம அரியண்டப் படுத்திறனெண்டு நினைக்காதையும்.. ஆனா அம்மாவும் பாவம்தானே..' அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவன் தரையைப் பார்த்தபடி நடந்து கொண்டிருந்தான். 'ப்ரவீன். எல்லாம் தெரிஞ்ச நீரே இப்பிடி கேட்டா..' காற்றிலும் மெலிதாய் வந்தது அவளின் குரல்.

'எனக்கு தெரியும் ஜெனி. அம்மாக்கு தெரியுமா.. அம்மா அவட பிள்ளைக்கு நல்ல வாழ்க்கை அமையேல்ல எண்டு யோசிக்கிறதில பிழயில்லையே..'

'அப்ப எண்ட உணர்வுகளுக்கு மதிப்பில்லையா? இது எல்லாம் வெறுத்துப் போய்தானே வேணாமெண்டு விலகி போறன்.. நான் எப்பிடி இருந்தனான் எண்டு உமக்கு தெரியும். ஏன் இப்ப இப்பிடி இருக்கிறனெண்டும் உமக்கு தெரியும். நான் என்ன செய்ய.. எல்லாருக்கும் மைக் போட்டு சொல்லிக் கொண்டு திரியவா?' அவள் படபடவென்று ஆனால் மெதுவாகப் பேசினாள். ஒவ்வொரு வார்த்தையும் ரணமான நினைவுகளை மீட்டிக் கொண்டு வந்து விழுந்தது. ஏற்கனவே நொருங்கிப் போயிருந்த அவள் இதயத்தைத் தூள்தூளாக்கியது.

திருமணத்தை அவள் விரும்பி வெறுக்கவில்லையே. மணவாழ்க்கை பற்றிய அவளின் கனவுகளைத் தொலைக்க வேண்டி வருமென்று அவனைக் கண்ட போது அவள் உணர்ந்திருக்கவில்லையே. தானும் அவனுமாய் அமைக்கவென்று எண்ணித் தொலைந்துபோன ஒரு எதிர் காலத்தை வேறொருவனுடன் பகிர்ந்து கொள்ள அவள் மறுப்பதில் நியாயமிருந்தது. எதிர்பார்த்ததை விட அதிகமான காதலையும் கனவிலும் எதிர்பார்க்காத வேதனையையும் அவன் விட்டுச்சென்ற பின், காதலும் திருமணமும் அவள் பார்வையில் வெறும் வெளிவேடங்களாகவே தெரிந்தன.

சமூகத்தின் பார்வைக்குத் தப்பவோ, தாயின் கண்ணீருக்கு உருகியோ விரும்பாத வாழ்வைத் தெரிவு செய்வதை அவள் வெறுத்தாள். பிறந்ததிலிருந்து தன்னுடன் பயணிக்கும் தன் ஆன்மாவுக்கு உண்மையாகஇருப்பதே அவளுக்குசரியென்றுபட்டது. இவையனைத்தையும் புரிந்து கொண்ட ஒரு உயிர் உலகத்திலுண்டென்றால் அது ப்ரவீன் மட்டும்தான். அவளின் வழிகாட்டுனர், அண்ணன், தம்பி, அப்பா, தேவைப் படும்போது கடிந்து கொள்பவன், அவளின் தவறுகளை எடுத்துக் கூறுபவன், உடைந்து அழும்போது மௌனத்தால் சமாதானம் சொல்பவன். அவள் வாழ்வில் அவன் ஒரு சக பயணி. பல்கலைக்கழகத்திலிருந்து அவள் பொஸ்டன் சென்று திரும்புமட்டும், அதன் பிறகும் அவளுடன் பயணித்தவன். அவளின் இலக்கியம், மொழி, இசை, எழுத்து அத்தனைக்கும் வெள்ளோட்டம் பார்க்கும் பணியிலிருந்தவன். அவளின் நண்பன்.

'உம்மட உணர்வுகள அவ மதிக்கிற படியாலதான் இன்னும் கட்டாய கல்யாணத்தில இறங்கயில்ல.. ஜெனி, உமக்காக எவ்வளவோ செய்தவா.. அவக்காக இந்த ஒரு விஷயத்தில விட்டுக்குடுக்க கூடாதா?' அவன் இயன்றளவு 'அவளைக் காயப்படுத்தாமலிருக்க வார்த்தைகளைத் தேர்ந்து பேசினான். 'நீர் விளங்கிக்கொள்ள வேணும். அவன், அவன் என்கேஜ் பண்ணிட்டான், வேற பிள்ளயோட.. நீர் ஏன் உம்ம பற்றி துளிகூட யோசிக்காத ஒருத்தன நினச்சு உம்மட வாழ்க்கைய பழுதாக்கிறீர்?'

ஒரு பெரும் நிசப்தம். அந்த வாகன நெரிசல் நிறைந்த தெருவிலும் அந்த நிசப்தம் கனமானதாக இருந்தது. அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள், சூரிய ஒளி பட்டுத்தெறித்ததில் அவள் கண்கள் பவளக் கற்கள் போல பளபளத்தன. 'ஏனெண்டால் நான் உண்மையா காதலிச்சன்' அத்துடன் அவள் சென்றுவிட்டாள்.

ஜெனியும் சார்ள்ஸும் காதலித்ததும், அவர்கள் வாழ்க்கை குறித்த கனவுகளும், அவற்றை எட்டிவிட அவர்களிருவரும் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொண்டதும், அவர்களிடையிலிருந்த சிறிய வேற்றுமைகளை அவர்கள் சேர்ந்து எதிர்கொண்டதும், வாழ்தல் குறித்து அவர்கள் கொண்டிருந்த கொள்கைகளும் அவர்களிருவரும் பல்கலைக்கழகத்தோடு தொலைந்து போகும் 'க்ளீஷே' காதலர்களல்ல என்ற படிமத்தை அவர்கள் நண்பர்களனைவரிடமும் ஏற்படுத்தியிருந்தது. அது ஓரளவிற்கு உண்மையும் கூட. ஜெனி மற்ற பெண்களைப் போன்றவளல்ல. அதிகம் சிந்திப்பவள். முடிவுகள் எடுக்கமுன் எத்தனை யோசித்தாலும், எடுத்த முடிவுகளில் பின்வாங்கும் குணம் அவளிடம் இருக்கவில்லை. சார்ள்ஸ் அப்படியொரு முடிவு. அவனும் அனைவரையும் போல் உள்ளங்கைகள் உரச கவிதை படைக்கும் கற்பனை சஞ்சாரியல்ல. யதார்த்தமானவன். அவளின் யதார்த்தத்தைக் காதலித்தவன். அவளின் வட்டத்துக்குள் விரும்பி நுழைந்து பின் அவனே வட்டமாகிப் போனவன்.

எந்த நொடியில் அவன் அவளைக் கடந்த ஒரு யதார்த்தத்தைக் கண்டானோ, காதலிப்பது தன்னை தன் பொறுப்புக்களிலிருந்து விரட்டுவதாக எண்ணிவிட்டான். 'மச்சான். அவளிண்ட லைஃப் ஒரு நொவெல் போல. ஹப்பிலி எவர் ஆஃவ்ட்டர் கதைகள், பிரக்டிக்கலா சரி வராது மச்சான். எனக்குப் படிக்க வேணும், அவள் நல்லவள், ஆனா அவளுக்கு நான் சரியானவன் இல்ல. அவளிட்ட தெளிவா சொல்லிட்டன். நீயும் விளங்கப்படுத்து. டெல் ஹெர் நொட் டு வெய்ட் ஃபொர் மீ, பிகோஸ் ஷீ பிலீவ்ஸ் இன் நொவெல்ஸ்.. நான் அவள தேடி வருவனெண்டு நம்பிக்கொண்டு அப்பிடியே இருந்திடுவாள். இப்பவும் அவள எனக்கு பிடிக்கும். ஆனா லைஃப்ப ஷார் பண்றது கஸ்டம்.' ப்ரவீன் கேட்டபோது அவன் பாணியில் ஆங்கிலமும் தமிழும் கலந்து கூறிவிட்டுப் போனான். அதன்பிறகு அவள் வாழ்க்கையில் அவன் இல்லை.

ஆரம்பத்தில் அவள் உடைந்து போயிருந்தாள். ஆனால் போகப் போகப் புரிந்துகொண்டாள். அவன் விருப்பத்திற்கு மதிப்பளித்து விலகிக் கொண்டாள். எனினும் தன் காதலில் உறுதியாயிருந்தாள். 'அவன நேசிச்ச மனம், அவனோடயே உடஞ்சு போச்சு. அதில புதுசா ஒண்டும் வராது. அவன் இல்லாத வாழ்க்கைக்கு என்ன பழக்கப்படுத்திக்கொண்டனே ஒழிய அவனுக்குப் பதிலா ஒரு வாழ்க்கைய ஏற்றுக் கொள்ள ஏலாது' இது ப்ரவீனின் கேள்விகளுக்கு அவளின் விளக்கம். யாரிடம் நியாயம் இருந்தது என ப்ரவீனுக்குப் புரியவில்லை. ஆனால் அவன் அவள் பக்கம் நின்றுகொண்டான்.

'ஜெனி' கூப்பிட்டுக் கொண்டே சற்று வேகமாக நடந்தான். 'ஜெனி கொஞ்சம் நில்லும்' அவள் நடையின் வேகம் அதிகரித்தது. 'ஜெனி என்னோட கோவிச்சு உமக்கு என்ன வரப் போகுது?'

அவள் நின்று திரும்பினாள். 'யாரோடையும் நான் கோவிக்கயில்ல ப்ரவீன். நான் ஃபீலிங்ஸ்ஸ துலச்சு கன நாளாச்சு. நான் இப்பிடியே நல்லா தானே இருக்கிறன். அது மட்டுமில்லாமல், நான் அவன மறக்கயில்ல. பிறகு எப்பிடி நான் இன்னுமொருத்தர மரி பண்ண ஏலும்? அது என்ன ஏற்றுக்கொள்ள தயாரா இருக்கிற ஒருத்தருக்கு நான் செய்யிற துரோகம் இல்லயா? அது ஏன் உமக்கு விளங்குதில்ல?' அவள் கண்கள் இன்னும் பளபளத்தன.

'விளங்குது ஜெனி, ஆனா வாழ்க்க முழுக்க இப்பிடியே இருக்கலாமெண்டு நினைகிறீரா? அம்மா எத்தின நாளைக்கு உம்மோட இருப்பா? தங்கச்சி மரி பண்ணி போகத்தான் போறா.. எனக்கு ஒருத்தி வந்துட்டாளெண்டா நானும் இப்ப மாரி இருக்க மாட்டன். எல்லாரும் மனுசர் தானே.. மாறிக் கொண்டே இருக்கிற மனுசர். உமக்கெண்டு ஒருத்தர் இல்லாம நீர் என்ன செய்யப் போறீர்?'

அவள் கண்களில் திடீரென்று ஒரு பிரகாசம். அதைத்தொடர்ந்து மீண்டுமொரு நிசப்தம். ஆனால் முன்னையதைப் போன்ற கனம் இப்போது இருக்கவில்லை. அவர்களுக்கிடையிலிருந்த காற்றில் ஒருவித பரவசம் ஊடாடுவதை அவன் உணர்ந்தான். அவளின் கண்கள் இப்போது ஒளிரத்தொடங்கின. அவற்றில் அவள் எதையோ வென்றுவிடப் போவது போன்ற ஒரு துடிப்பு பாய்ந்துகொண்டிருந்தது. 'ப்ரவீன் முதலே சொல்ல வேணுமெண்டு தான் நினச்சன். எல்லாம் சரி வந்தால் சொல்லுவம் எண்டுதான் வெய்ட் பண்ணது. ஐம் அடொப்டிங் எ ச்சைல்ட்.' அரிதாக உதிரும் அவள் புன்னகைகளில் ஒன்று இதழோரமாய் வந்து விழுந்தது.

ப்ரவீன் உறைந்து போனான். இது பற்றி அவள் அவ்வப்போது கூறிய போதெல்லாம் அவன் அதை பெரிதாக எண்ணவில்லை. அத்தனை பெரிய முடிவெடுக்க அவள் இன்னும் தாமதிப்பாளென்று அவன் எதிர்பார்த்தான். அந்த செய்தி உண்மையில் அவனை உலுக்கிவிட்டது. 'ஜெனி இது பெரிய முடிவு' அவன் மெதுவாகச் சொன்னான். அவள் கண்களில் சிறிய ஏமாற்றம். 'தெரியும். ஆனா தேவையான முடிவு. இப்ப நான் தனியா இருக்க போறதில்ல தானே.. எனக்கு ஒரு மகள் இருப்பாள்' அவள் மீண்டும் சிரித்தாள்.

'ஆனா ஜெனி, ஊர் வாய மூட ஏலாது. அம்மாக்கு என்ன சொல்லப் போறீர்? கல்யாணமும் முடிக்காமல், ஒரு பிள்ளய கொண்டு வந்து வளக்கிறது... உம்ம பிழையா கதைப்பினம்' அவன் திக்கித் திக்கிக் கொட்டினான். அவள் கண்களில் உறுதி மட்டும் தெரிந்தது. 'எல்லாம் யோசிச்சுப் பாத்தாச்சு. ஆக்களுக்காக நான் பிறக்கயில்ல ப்ரவீன். அம்மா மட்டும் தான் கேள்வி. அவக்கு பிடிக்காது. ஆனா போக போக விளங்கிக் கொள்ளுவா. இது அவனால இல்ல. நான் எனக்காக எடுத்த முடிவு. வாற கிழம பேப்பர்ஸ் சைன் பண்ணலாமெண்டு சிஸ்டர் சொன்னா.. உமக்கு விருப்பமெண்டா வாரும்.' சொல்லி விட்டுச் சிரித்தாள். கள்ளிப்பூக்கள் மலர்ந்தது போல இருந்தது. 'ஐல் லெட் யூ நோ' அவன் மெலிதாகச் சிரித்தான். ஜெனி லேசாகத் தலையாட்டி விட்டு ஒரு முச்சக்கரவண்டியில் ஏறிச் சென்றுவிட்டாள்.

அவன் அப்படியே நின்றான், விலகிச் சென்ற அவளைப் பார்த்தவாறு. அவள் எண்ணங்களை எப்போதும் எதிர்வுகூற முடியவில்லை. அவளுக்கென்று செய்து கொண்ட சத்தியங்களைக் காப்பாற்றுவதில் அவள் கொண்டிருந்த உறுதி அவனை மிரள வைத்தது. சார்ள்ஸ் ஒரு பகுதிவரை சரியாகத்தான் சொன்னான். அவள் புத்தகங்களை வாழ்பவள். ஆனால் அவை 'ஹப்பிலி எவர் ஆஃவ்ட்டர்' கதைகளல்ல. அதையும் தாண்டி நீளும் அவளின் யதார்த்தமான கிறுக்கல்கள். அவனையும் அறியாமல் ஒரு புன்னகை பிறக்க கண்கள் பனித்தது. 'ஐல் ஜொய்ன் யூ நெக்ஸ்ட் வீக். மருமகள காண வேணும்' என்று குறுஞ்செய்தி அனுப்பிவிட்டு தன் வீட்டிற்குச் செல்லும் தெருவினுள் திரும்பினான். ப்ரவீன் புரிந்துகொண்டான்.

◆◆◆

'அம்மா!'

கரை வந்து மோதும் கடலலை நுரை போல இதமாக வந்து அவள் காதில் விழுந்தது அந்தக் குரல். அவள் கைகள் கைப்பையை இறுகப் பற்றிக் கொள்ள அதே வேகத்தில் கண்களை மூடிக்கொண்டாள்.

'இது யாரு?'

'அப்பா யாரு?'

'யார் பெத்து போட்டதோ!'

'என்ன சாதியோ என்ன சமயமோ!'

'கலியாணம் முடிக்காம பிள்ளய கொண்டு வந்து வச்சிருக்கிறாளே?'

'இவளிட பிள்ளையோ யாரு கண்டது!'

(தொடர்ச்சி 11 ம் பக்கம்)

## ஈர விழிகளுடன் ஈர் ஐந்து ஆண்டு விண்ணக வாழ்வின் நினைவு

அன்னையின் மடியில்
04
09
1939



ஆண்டவன் கரத்தில்
10
07
2010

அமரர்

### அருட்சகோதரி மேரி லூயிஸ் அந்தோனிப்பிள்ளை (தி.கு.க)

"ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை" (தி.பா. 23:1)

பத்து ஆண்டுகள் பறந்து ஓடினாலும்
பாசமும் நேசமும் பறந்து ஓடிடுமோ!
தாயின் கருவில் உருவாகும் முன்னரே
தேவன் பெயர் சொல்லி அழைத்த சோதரியே!
எங்கள் இதயத்தில் எழுத்திருக்கும் கோயிலில் நீர்
என்றும் இருப்பீர் அம்மா! ஏதும் இதில் மாற்றமில்லை

AD 31

42/5, மவுண் கார்மேல் வீதி, யாழ்ப்பாணம்.

அன்புடன் நினைசூரும், குடும்பத்தினர்.

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
17
02
1962



விண்ணில்
30
06
2018

அமரர்

### சுவாம்பிள்ளை ஞானராஜ்

" உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"

நெஞ்சினிலே நிலையாக நின்று
நினைவுகளில் மகிழ்வைத் தந்து
இறைவனிடம் அமைதியாகத் தூங்கும்
எமது அன்புத் தந்தையின் ஈராண்டு
நினைவு நாளில் பிரார்த்திக்கின்றோம்.

நீங்கள் மறைந்து ஈராண்டு ஆனாலும்
உங்களை நினைத்து நெஞ்சம் அழுகின்றது.
ஈராண்டுகள் அல்ல ஆண்டுகள் பல ஆனாலும்
மறவோம் நாம் உம் அன்பு முகத்தை.

இறைவா, நீர் தந்த என் அன்பு தந்தைக்காய்
நன்றிக்கரம் குவிக்கின்றேன்.
அவரை உம் திருப்பாதம் சேர்த்து மகிழச் செய்யும்.

AD 35

லூட்சேர்ன், சுவிஸ்லாந்து

பிரிவால் துயருறும் அன்பு மனைவி, பாசமிகு மகள்.

## எல்லா இடங்களிலும் கடவுளைப் பார்ப்பவர் யார்? திருத்தந்தை எழுப்பிய வினா



இயேசுவின் தூய்மைமிகு இதயத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்த ஜூன் மாதத்தில், அதிலும் குறிப்பாக, இயேசுவின் திரு இருதயபக்திமுயற்சி சிறப்பாக கடைப்பிடிக்கப்படும் வெள்ளிக்கிழமையன்று, இயேசுவின் திருஇதயத்தின் மகத்துவத்தை மையப்படுத்தி, செய்தியை வெளியிட்டுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

"எவற்றையும் இதயத்திலிருந்து நோக்குகிறவர்கள் மட்டுமே, அவற்றை நன்றாகப் பார்க்கின்றனர், ஏனெனில், அத்தகையோர், ஒவ்வொரு மனிதரின் தவறுகள், நம்பிக்கை மற்றும், இன்னல்கள் ஆகிய அனைத்தையும் கடந்து, அவர்களை சகோதரர் அல்லது சகோதரியாகப் பார்ப்பதற்கு அறிந்திருக்கின்றனர், அத்தகைய மனிதர்கள், கடவுளை எல்லா இடங்களிலும் பார்க்கின்றனர்" என்ற சொற்கள், திருத்தந்தையின் செய்தியில் அமைந்திருந்தன.

## 31ம் நினைவு நாள்



அமரர்

பிரான்சிஸ் கிரோவர் றெஜினோல்ட் (றெஜி)

மண்ணில் 18.02.1980 — விண்ணில் 08.06.2020

"சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்"

**நன்றி நவிலலும் இரங்கல் திருப்பலியும்**

எம்மை விட்டுப் பிரிந்த எங்கள் குடும்ப குலவிளக்கு அமரர் பிரான்சிஸ் கிரோவர் றெஜினோல்ட் (றெஜி) அவர்களின் திடீர் மறைவினால் தவித்திருந்த வேளையில் நேரடியாக வந்து துயர் பகிர்ந்து எம்மைத் தேற்றியவர்களுக்கும், மரணச் சடங்கில் கலந்து கொண்டு எம் துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் தொலைபேசியினூடாகவும், சமூக வலைத்தளங்கள் மற்றும் பதாதைகள், துண்டுப் பிரசுரங்கள், மலர் வளையங்கள் ஊடாகவும் எமது துயரில் பங் கேற்று துயரைப் பகிர்ந்து கொண்ட அனைத்து உறவுகள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், வைத்திய அதிகாரிகள், தாதிகள், புகையிரத நிலைய அதிகாரிகள், ஊழியர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிற்காக யாழ்ப்பாணம் புனித மரியாள் பேராலயத்தில் 08.07.2020 (புதன்கிழமை) காலை 11.15 மணியளவில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்கு கொள்வதுடன் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 11, அச்சக வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

இவரது பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளை மற்றும் குடும்பத்தினர்.

AD 33

## விண்ணக வாழ்வின் 45வது நாள் நினைவு

மண்ணில்
19
09
1957



விண்ணில்
15
05
2020

அமரர்

### அந்தோனி கொஸ்மாம்பிள்ளை [யோகம்]

மண்ணக வாழ்விலும் உம்மை அன்பு செய்தோம்
விண்ணக வாழ்விலும் உம்மை அன்பு செய்வோம்
ஓ மரணமே! உன் நினைவுகள் இனிமையானவை
நீதியில் வாழும் மனிதனுக்கு மரணத்தின் பயமே இல்லையே...

விண்ணகமே எமது தாய்நாடு அதை நோக்கியே நாம் பயணிக்கிறோம். இப்பயணத்தில் விண்ணகத்தை நோக்கி விரைவாகப் பறந்த கொஸ்மாம்பிள்ளையின் ஆன்மா நித்தியமாட்சியில் அமைதியை அனுபவிப்பதாக.

AD 29

எவுசேனி இல்லம்.

அன்புடன் நினைவுகூரும்

## கிறுக்கல்கள்....

(10ம் பக்கத் தொடர்ச்சி)

'அப்ப பிள்ள பெற ஏலாதெண்டுதான் முடிக்கயில்ல போல!'

'நினச்ச ஆட்டம் ஆடுவாள், திரியிற திரிச்சல்..'

'அந்தப் பெட்டையையும் பழுதாக்க கொண்டு வந்துட்டாள்'

இன்னும் பல குரல்கள் எதிரொலிக்க பல்லாயிரம் மேரி அன்ரிமார் அவள் கன் முன் வந்துபோயினர். கண்களிலிருந்து ஒரு துளி நீர் கன்னத்தில் வடிய, அதைத் துடைத்துக்கொண்டு மெல்லத் திரும்பினாள் ஜெனி.

அருட்சகோதரியின் கைகளுக்கு நடுவில் ஏறத்தாள மூன்றடியில் ஒருத்தி. உச்சந்தலையில் ஒரு சிறிய தென்னைமரம், சற்றே மருண்ட பெரிய கண்கள், மெல்லிய முறுவல்,

நெஞ்சோடு ஒரு தாளை அணைத்தவாறு நின்றாள். அவள் அழகாக இருந்தாள்.

முழங்காலில் இருந்து அவளை நோக்கித் தன் தலையை அசைத்தாள் ஜெனி.

அந்த மூன்றடிக் குழந்தை, நெழிந்து நெழிந்து முன்னோக்கி வந்தாள். அவளை வாரி எடுத்து நெற்றியில் ஒரு முத்தம் கொடுத்தாள் ஜெனி. உடனே குழந்தை பிரகாசமான புன்சிரிப்புடன் அந்தத் தாளை ஜெனியிடம் நீட்டினாள்.

'அம்மாவுக்குக் குடுக்கவாமெண்டு பெட்டைக்கு ஒரு கிழமையா இதான் வேல' மெல்லச்சிரித்தவாறு அருட்சகோதரி ஒரு அறிமுகம் கொடுத்தார்.

குழந்தையை ஒரு கையில் அணைத்தவாறு தன் மறு கையில் அவள் கொடுத்த தாளை வாங்கிப் பார்த்தாள் ஜெனி.

*கிறுக்கல்கள் எத்தனை அழகானவை!*

## 50ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
1962
10
06



உதிர்வு
1970
06
26

அமரர்

### மிரியம் ஷாமினி சில்வெஸ்ரர்

ஐம்பது ஆண்டுகள் கடந்தனவா
எம் குடும்ப விளக்காய் உதித்தவள் நீதானா
எமை விட்டுப் பிரிந்தாலும் மறந்திடுவோமா
இமை மூட மறந்தோம் பாலாகி உன் நினைவாலே
பாதியில் மறைந்தாலும் மீதி உள்ள காலமெல்லாம் நீ
ஜோதியாய் சுடர் விளக்காய் எம் வாழ்வின் ஒளியே
ஆதியும் அந்தமும் அற்ற இறை நிழலில் நீயிருப்பாய்
இசைத்தபடி இறைவன் வாழ்த்தொலியை புகழ்ந்தபடி
நீயும் இன்னொரு காவல் சம்மனசாக

AD 31

சுருவில்.

பாச நினைவுகளுடன். அம்மா, சகோதரர், சகோதரிகள்.

## 8ம் ஆண்டு நினைவு

பிறப்பு
16
11
1935



இறப்பு
24
06
2012

அமரர்

### திருமதி மேரிறீற்றா ஆசீர்வாதம் (றஞ்சிதம்)

"ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும்" (தி.பா. 27:4)

தளபதி செபஸ்தியானின் பாதுகாவலில் பிறந்து தவமுனிவன் கயித்தானின் பாதுகாவலில் வாழ்ந்து பாலைவனக் குரலோனின் திருநாளில் பரலோகம் நோக்கிச் சென்ற தாயே இவ்வுலகம் விட்டு நீங்கள் சென்று ஈர் நான்கு ஆண்டுகள் ஆயினவே அமைதியுடன் உம் ஆன்மா துயில்கொள்ள அனுதினமும் ஆண்டவரை வேண்டுகின்றோம்.

AD 28

மாரீசன்கூடல், இளவாலை.

என்றும் நினைவுகளுடன் அன்புக்கணவர், பிள்ளைகள், மற்றும் உறவுகள்.
















ஆகஸ்ட் 2020 இல் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் யாழ். ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களை யாழ். ஆயர் இல்லத்தில் கடந்தவாரம் சந்தித்து ஆசி பெற்றனர்.

## வாழ்வின் உண்மைப் பொருளைக் கண்டுகொள்வோம் -திருத்தந்தை பிரான்சிஸ் -

"நீங்கள், உங்கள் வாழ்வின் பொருள் என்ன என்பதைத் தேடுகையில், ஏதாவது ஓர் அர்த்தத்தையாவது கண்டு கொள்ளாவிட்டால், செல்வம், தொழில், உலகம்தரும் இன்பம், போதையைக் கொடுக்கும் காரியங்கள் போன்றவற்றில் உங்களை உட்படுத்துகிறீர்கள். அதற்கு மாறாக, இயேசுவிடம் உங்களைக் கையளியுங்கள். அப்போது, நீங்கள் அன்புகூரப்பட்டு வருகிறீர்கள் என்பதைக் கண்டுகொள்வீர்கள்" என்று கடந்த வாரம் திருத்தந்தை கூறியுள்ளார்.

## விற்பனைக்கு

அழகான மெழுகுவர்த்திகள், ஆலயத் திருப்பண்டப் பொருட்கள், திருச் சொரூபங்கள், திருவிவிலியம், பூசைப் புத்தகங்கள், முதன்நன்மை சான்றிதழ் மற்றும் முதன் நன்மை பரிசுப் பொருட்கள் என்பன மலிவு விலையில் புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் விற்பனைக்கு உண்டு.

## கிறிஸ்து இல்லத்தில் வரவேற்பு மாதா



ஊர்காவற்துறையில் கல்வியில் பல மாணவர்களை உருவாக்கிக் கொண்டிருக்கும் புனித அந்தோனியார் கல்லூரியின் "கிறிஸ்து இல்லம்" எனும் பெயருடன் வளர்ந்து வரும் விடுதியில், புதிதாக அமைக்கப்பட்ட "வரவேற்பு மாதா" திருச்சுரூபம் 13.06.2020 சனிக்கிழமை தீவக மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி ம. டேவிட் அடிகளாரால் ஆசீர்வதிக்கப்பட்டு, வழிபாடுகளுக்காக வைக்கப்பட்டது. இதற்கு ஊக்கமும், வழிகாட்டியுமாக இருந்த கல்லூரி அதிபர் அருட்பணி. ம. அன்ரன் அமலதாஸ் அவர்களும், கல்லூரி உப அதிபர் அருட்பணி. அ. மைக் மயூரன் அடிகளாரும் பாராட்டுக்குரியவர்கள்.

## கொவிட் -19 நிவாரணப் பணி



யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் கொவிட் -19 நிவாரணப் பணியானது நெடுந்தீவு பிரதேசத்தில் நிறுவன இயக்குனர் அருட்பணி இயூஜின் பிரான்சிஸ் அடிகளின் வழிகாட்டலுக்கு அமைவாக நிறுவனப் பணியாளர்களினால் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி உதவித்திட்டமானது 20.06.2020 (சனிக்கிழமை) அன்று நெடுந்தீவுப் பங்குத்தந்தை அருட்பணி J.A. அருள்தாஸ் தலைமையில் யுவானியார் ஆலயத்தில் வழங்கப்பட்டது. இவ் உதவித்திட்டமானது மாற்றுவலுவுள்ளோர், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் உள்ளடங்கலாக 60 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள், சுகாதார தொற்று நீக்கித் திரவம், சவர்க்காரம், முகக்கவசம், வீட்டுத் தோட்ட விதைகள், சுகாதார விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள் என்பவையும் வழங்கி வைக்கப்பட்டன. இவ் உதவித் திட்டத்தைப் பெற்றுக் கொண்ட மக்கள் கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குனர் அருட்பணி இயூஜின் பிரான்சிஸ் அடிகளுக்குத் தமது மனப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.

## துயர் பகிர்கின்றோம்



இந்தியாவிலிருந்து வருகை தந்து யாழ். மறை மாவட்டத்தில் பற்றீசியன் தொழிற்பயிற்சி நிலையத்திலும், முழங்காவில் இளையோர் உருவாக்க மையத்திலும் பணியாற்றிய சலேசியன் சபையைச் சேர்ந்த அருட்திரு தொம்மை அந்தோனிறாஜன் அவர்கள் அகால மரணம் அடைந்துவிட்டார். நீர்கொழும்பில் கடலில் நீராடுகையில் அவரது உயிர் காவு கொள்ளப்பட்டது. மறைந்த அடிகளாரின் திருவுடல் அவரது சொந்த இடமாகிய திருச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

இப்பணியாளரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை மன்றாடுவோம்.

## சுயமுயற்சியால் எம் வளங்களை வலுவாக்குவோம் - யாழ். கரித்தாஸ் கியூடெக் இயக்குனர் -



ஒருங்கிணைந்த மனித மேம்பாட்டுக் குடிமக்கள் கலந்துரையாடலும் சமூகங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு செயற்திட்டத்தின் கீழ் யாழ் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தால் மணியந்தோட்டத்தில் சுயதொழில் முயற்சியாளர்களுக்கான கண்காட்சியும் விற்பனையும் 12.06.2020 வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இக்கண்காட்சியில் ஆனைக்கோட்டை, புதிய சோனகத்தெரு, சோனகத்தெரு, உதயபுரம் மணியந்தோட்டம் பகுதியில் உள்ள குழுக்கள் தமது சுயதொழில் முயற்சிப் பொருட்களைக் காட்சிப்படுத்தினர்.

ஆரம்ப சிறப்புரையாற்றிய கியூடெக் கரித்தாஸ் இயக்குனர் அருட்பணி ச.இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் "எமது சூழலில் பல இன்னல்களை எதிர் கொண்ட போதும் தளராத மனஉணர்வுடன் சுயமுயற்சியால் முன்னேற முயன்றவர்களின் வெளிப்பாடுகள் எல்லா சமூகத்திற்கும் முன்மாதிரியான அடையாளமாக இக்கண்காட்சி அமைந்துள்ளமை பாராட்டத்தக்கது.

எந்த இயற்கை சவால்களிலும் எம்மால் முயன்றால் முடியும் என்ற விடா முயற்சியை நிரூபித்த சிறுகுழுக்களோடு இணைந்து இக் கொரோனா காலத்திலும் இவர்களின் கூட்டு முயற்சிகளை ஊக்கப்படுத்துவதில் எம்மால் முயன்றளவு பங்களிப்பைத் தருவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

இந்நிகழ்ச்சியில் கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர், பொருளாதார உத்திபோகத்தர், நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர், பங்குத் தந்தை, மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

இக்கண்காட்சி நிகழ்வுக்குப் பங்குத்தந்தை S. மரிய செபஸ்தியன் அடிகளார் இயூஜின் கல்வி வளாகத்தைத் தந்து உதவியதோடு தன்னுடைய ஆக்க பூர்வமான ஆலோசனைகளை வழங்கி ஊக்கம் கொடுத்தார்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2020ம் ஆண்டு யூன் மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.